Not for sale

தமிழாக்கம்

மார்ச் - ஏப்ரல் 2017

# The Herald

## of Christ's Kingdom



## கிறிஸ்துவை நினைவுகூருதல்

கிறிஸ்துவை நினைவுகூருதல் • கடினமான உபதேசம் • எண்ணெய் ஊற்றப்பட்ட போது

தேவனுடைய தோட்டம் • முள்ளுள்ள கிரீடத்தை நான் காணும்போது

சோதனைகளைத் தழுவுதல் • இவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும்

Printed by : H-cass, 98424 97566

கிறிஸ்துவின் நினைவுகூருதல்

# ஆதியிலே

"**The Herald of Christ's Kingdom**" என்ற இந்தப் பிரதி, இயேசுவின் மரணத்தை நினைவுகூருதலை ஆழ்ந்து ஆராய்கிறது. 2017 ஏப்ரல் 9-ஆம் தேதி, சூரியன் அஸ்தமித்தப்பின் உலகமெங்கும் உள்ள இயேசுவின் சீஷர்கள் அவருடைய வாழ்க்கையையும், மரணத்தையும் நினைவுகூருவார்கள். இந்தப் பிரதியிலுள்ள கட்டுரைகள், பெரும்பாலும் அமெரிக்காவிற்கு வெளியே பிறந்தவர்கள் அல்லது வாழ்ந்து கொண்டிருப்பவர்களால் எழுதப்பட்டுள்ளது. ஆகவே, இந்தப் பிரதியிலுள்ள சிந்தைகள், நெருக்கமானப் பாதையில் நம்மோடு நடக்கக்கூடிய, இந்த உலகத்திலுள்ள அனைவரோடும் இருக்கும் விலையேறப்பெற்ற ஐக்கியத்தைப் பின்னிபிணைக்கட்டும்.

"கிறிஸ்துவை நினைவுகூருதல்" என்ற கட்டுரை, இயேசுவின் பலியைப்பற்றிய முக்கியத்துவத்தைத் தியானிக்கிறது. முதல் ஹெரால்டு பிரதி 1957, ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது. இது கடந்த ஹெரால்டு பதிப்பாசிரியரும் PBI இயக்குநராகிய W. J. Siekman-ஆல் எழுதப்பட்டது. அவருக்குச் செவிக்கொடுத்தவர்கள், தேவனுடைய ஆழமானக் காரியங்களைப் புரிந்துகொள்வதற்கு, பல வருடங்களாக அவர் பெருமுயற்சி எடுத்தார்.

"ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு (யோவான் 6:53-ஆம் வசனம்) மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ண வேண்டும்" என்று இயேசு சொன்ன வார்த்தைகளை "கடினமான உபதேசம்" என்ற தலைப்பு மையப்படுத்துகிறது. மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, இரத்தம் புசிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்ததினால், பல யூதர்கள் இயேசுவின் செய்தியால் வருத்தமடைந்தார்கள். இந்தச் சம்பவத்திற்குப்பின் அநேக சீஷர்கள் அவரைவிட்டுப் புறப்பட்டார்கள். அப்போது, "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களா" என்று இயேசு பன்னிருவரையும் கேட்டார்.

பிரதான ஆசாரியனுடைய தலையில் ஊற்றப்பட்ட அபிஷேகத் தைலம், எவ்வாறு பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்துகிறது என்றும் கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களை எவ்வாறு ஒருங்கிணைப்படுத்துகிறது என்றும், "எண்ணெய் ஊற்றப்பட்டபோது" என்ற தலைப்பு ஆராய்கிறது. இயேசுவின் தலையையும், பாதங்களையும் தைலத்தினால் மரியாள் அபிஷேகித்தக் காரியமானது, நம்முடைய ஆண்டவருக்கும், அவருடைய சகோதரர்களுக்கும் நாம் காட்ட வேண்டிய ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதலையும், பாராட்டையும் எடுத்துக்காட்டுகிறது.

பாவமற்ற இயேசு செலவழித்த கடைசி இரவு "தேவனுடைய தோட்டம்" என்ற தலைப்பானது இந்த உலகத்தில் பாவம் நுழைந்த "ஏதேன் தோட்டத்தை" வேறுபடுத்திக்காட்டுகிறது. ஆதாமின் பாவக்கறையை நீக்குவதற்காக, இயேசு ஈடுபலியைச் செலுத்தினார். மற்றும் இதுவரையில் வாழ்ந்த அனைவருக்கும், ஏதேன்போன்ற நிலைமையைத் திரும்பவும்கொடுக்க ஒரு வாய்ப்பு அளிக்கிறார்.

"முள்ளுள்ள கிரீடத்தை நான் காணும்போது" என்னும் தலைப்பு "அடிக்கப்பட்டு" மற்றும் "சிறுமைப்பட்டு" சிலுவைக்குச் சென்ற இயேசுவைப்பற்றிய ஏசாயாவின் விளக்கத்தை ஆய்வு செய்கிறது. அவரது தலையில் வைக்கப்பட்ட முட்கிரீடம் ஆதாம் பாவம் செய்தபின் முட்களுக்கும் குறுக்குகளுக்கும் மத்தியில் உழைப்பது உட்பட, பூமியின்மீது வைத்த சாபத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது. இறுதியில் இவைகள் நிரந்தரமாக நீக்கப்படும்.

நெருக்கமான வழியில் பிரச்சனைகளோடு போராடக்கூடியவர்களுக்கு அநுகூலமான செயல் முறை சார்ந்த அறிவுரைகளை, "சோதனைகளைத் தழுவுதல்" (ஆர்வமாக ஏற்றுக்கொள்ளுதல்) என்ற தலைப்பு கொடுக்கிறது. நம்முடைய தவறுகளின் மத்தியில் நம்மை வழிநடத்துவதற்கு தேவனை அனுமதித்து, அவைகள் ஒவ்வொன்றையும் நம்முடைய குணலட்சணத்தின் வளர்ச்சிக்கான படி கற்களாகப் பாவிக்க வேண்டும்.

"இவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும்" என்ற தலைப்பு, யோவான் 17-ஆம்அதிகாரத்திலுள்ள இயேசுவின் ஜெபத்தை ஆராய்கிறது. நாம் ஒருமித்து சிந்திக்க வேண்டுமென்பது மாத்திரம் கிறிஸ்தவ ஐக்கியமல்ல, ஆனால் நோக்கத்தில் ஒருமனப்பாடு மற்றும் அன்பில் ஈடுபாடு மற்றும் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் முன்னேறிச் செல்லும்போது ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவதும் ஆகும்.

உங்களுடைய பிரதிபலிப்புகள் இந்த நினைவுகூருதல் காலத்தில் உங்களை இயேசுவின் அருகில் ஈர்க்கட்டும். நம்முடைய இரட்சகரின் மாபெரும் பலியைப் புரிந்து பாராட்டக்கூடிய ஹெரால்டு பிரதியின் பதிப்பாசிரியர்கள், இந்தக் கட்டுரைகள் நம்முடைய வாசகர்களுக்குப் பயனுள்ளதும், ஊக்குவிக்கக்கூடியதுமாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

**மார்ச்/ஏப்ரல் 2017**


**கிறிஸ்துவை நினைவுகூருதல்** 37
இயேசுவின் பலியின்மேல் பிரதிபலித்தல்

**கடினமான உபதேசம்** 39
தகுதியோடு பங்கெடுத்தல்

**எண்ணெய் ஊற்றப்பட்டபோது** 43
ஒற்றுமையை மேம்படுத்துதல்

**தேவனுடைய தோட்டம்** 49
ஆதாம் மற்றும் இயேசுவை வேறுபடுத்துதல்

**முள்ளுள்ள கிரீடத்தை நான் காணும்போது** 54
மனுக்குலத்தின்மேலுள்ள சாபம் நீக்கப்படுதல்

**சோதனைகளைத் தழுவுதல்** 58
சரியான நோக்கத்தைக் காத்துக்கொள்ளுதல்


**இவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும்** 63
உண்மையான ஐக்கியத்தை மேம்படுத்துதல்

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 67
இஸ்ரயேலின் பாரம்

இயேசுவின் பலியின்மேல் பிரதிபலித்தல்

# கிறிஸ்துவை நினைவுகூருதல்

"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" (லூக்கா 22:19).




Will Siekman

ஞாயிறு மாலை அன்று 2017, ஏப்ரல் 9-ஆம் தேதி நாம் அனைவரும் சிறிய அல்லது பெரிய கூட்டமாக (அல்லது ஒருவேளை தனிமையிலோ) பயபக்தியோடு மனமகிழ்ச்சியாகக்கூடி இராப்போஜனத்தை ஏற்படுத்தி, அதை நினைவுகூர வேண்டுமென்ற கட்டளைக் கொடுத்தவருக்குக் கீழ்ப்படியும்படியாக, நாம் அனைவரும் ஆண்டவரின் இராப்போஜனத்தை அநுசரிப்போம். சிலருக்கு, நம்முடைய புனித யாத்திரை மிகக் கடுமையாகவும், அதிகமாகவும் இருந்திருக்கலாம். ஆனால் நம்முடைய கிறிஸ்தவ அனுபவத்தில் மீண்டும் ஒருமுறை பந்தி போஜனத்தை அநுசரிக்க, பரிசுத்த ஸ்தலத்திற்கு அருகில் வருகிறோம்.

"அவர்கள் போஜனம் பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்" (மத்தேயு 26:26, 27).

### "இதை என் நினைவாகச் செய்யுங்கள்"

மீட்பு நீக்க உதவிய உம்முடைய விலையேறப்பெற்ற பலியை, உண்மையில் நாங்கள் நினைவு கூருகிறோம். உலக தோற்றத்திற்கு முன் பிதாவோடு உமக்கிருந்த மகிமையை – மனிதனாக வருவதற்கு முன் உம்முடைய ஐசுவரியங்களை நினைவுகூருகிறோம் (யோவான் 17:5). சர்வ சிருஷ்டிக்கும் நீர் முதலானவர், தேவனுடைய சிருஷ்டிகளின் துவக்கமும், நித்தமும் அவருடைய மனமகிழ்ச்சியும் எப்போதும் அவருக்குள் பேரானந்தமுள்ளவராக இருந்தீர். ஏனெனில் ஆதிமுதற் கொண்டே பண்டைய காலத்தின் வேலைகளுக்கு முன் அவர் உம்மைத் தம்முடைய வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார். பூமி உண்டாவதற்கு முன் துவக்கத்திலிருந்தும், நித்தியத்திற்கும் அவரே உம்மைப் பெற்றிருந்தார். சகலமும் உம் வழியாக சிருஷ்டிக்கப்பட்டது, உம்மாலேயன்றி எதுவும் சிருஷ்டிக்கப்படவில்லை. பூமியின் அஸ்திபாரங்கள் போடப்படும்போது, விடிவெள்ளி நட்சத்திரங்களும், தேவ புத்திரர்கள் அனைவரும் ஆரவாரித்து மகிழ்ந்ததை நீர் கேட்டீர் (நீதிமொழிகள் 8; யோவான் 1)!

ஆம் ஆண்டவரே காலம் நிறைவேறியபோது, உம்முடைய பிதாக்களுக்குக் கீழ்ப்படியும்படி, உம்முடைய மகிமையை விட்டிறங்கி, ஒரு ஸ்திரீயினிடத்தில் பிறந்து மாம்சமானீர் என்பதை நாங்கள் நினைவுகூருகிறோம். எங்கள் நிமித்தம் நீர் தரித்திரரானீர் (2 கொரிந்தியர் 8:9). நீர் பிறந்த சூழ்நிலையை நாங்கள் நினைவுகூருகிறோம் - சத்திரத்தில் இடமில்லாதிருந்ததினால் உம்மை துணிகளில் சுற்றி முன்னணியில் கிடத்தி வைத்திருந்ததை நாங்கள் நினைவுகூருகிறோம் (லூக்கா 2:7). நீர் சிருஷ்டித்த உலகத்திற்கு நீர் வந்தபோது, இந்த உலகம் உம்மை அறியவில்லை. எந்தவிதமானநற்பெயர்களையும் பெற்றுக் கொள்ளாமல் ஒரு அடிமையின் ரூபமெடுத்தீர் (பிலிப்பியர் 2:7). இந்த அண்டசராசத்தை உண்டாக்கின எஜமானனாகிய உம்மை (மாற்கு 6:3) ஒரு தச்சன் என்று அழைத்தார்கள் அல்லவா? ஆம், நரிகளுக்குக் குழிகள் இருந்தது, பறவைகளுக்குக் கூடுகளும் இருந்தது, உமக்கோ தலைசாய்க்க இடமில்லாதிருந்தது (மத்தேயு 8:20). நீர் உமக்குச் சொந்தமானதில் வந்தீர், உமக்குச் சொந்தமானவர்கள் உம்மை ஏற்றுக்கொள்ளவில்லை (யோவான் 1:11). நீர் இகழப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, துயரத்தால் நிறைந்திருந்தீர் (ஏசாயா 53:3). கோழி தன் குஞ்சுகளைச் சேர்ப்பதுபோல, எத்தனையோ முறை உம்முடைய மிகுதியான அன்பினால் நீர் உம்முடைய இஸ்ரயேல் ஜனங்களை கூட்டிச் சேர்க்க மனதாயிருந்தீர், அவர்களுக்கோ மனதில்லாமற் போனது (மத்தேயு 23:37). ஆயினும் தன்னுடைய மந்தையைப் பராமரிக்கும் மேய்ப்பனைப்போல, அந்தத் திரளான ஜனங்களின்மேல் உமக்கு எவ்வளவு இரக்கம் இருந்தது. ஓ இரட்சகரே, இவைகளை மட்டுமல்ல, இதற்கும் அதிகமானவைகளையும் நினைவு கூருகிறோம்.

நீர் எவ்வாறு அனைவருக்கும் நன்மை செய்தவராகவும், உம்முடைய மகிமையை வெளிப்படுத்தினீர் என்பதையும் நாங்கள் நினைவுகூருகிறோம். பார்வையற்றவர்கள் பார்வையடைந்தார்கள், முடவர் நடந்தார்கள், குஷ்டரோகிகள் சுத்திகரிக்கப்பட்டார்கள், செவிடர் கேட்கும் திராணியைப் பெற்றார்கள் மரித்தோர் எழுப்பப்பட்டார்கள், திரளானவர்கள் போஷிக்கப் பட்டார்கள் மற்றும் சுவிசேஷம் தரித்திரர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டது. பர்தொலொமேயு, யவீரு, நாயீன் ஊர் விதவை, மார்த்தாள், மரியாள், லாசரு மற்றும் பலர்

உம்முடைய கிருபையில் பங்குபெற்றார்கள். உம்மைப்போல எந்த மனுஷனும் பேசினதுண்டோ? உம்முடைய கிருபைப் பொருந்திய வார்த்தைகளைக் கேட்ட அனைவரும் பிரம்மித்து, சாட்சிக் கொடுத்தார்கள் அல்லவா! பிதா உமக்குக் கொடுத்திருந்த ஜீவனுள்ள அற்புதமான வார்த்தைகள், அந்த வார்த்தைகள் ஆவியும், ஜீவனுமாய் இருந்ததே!

கடைசி மணி நேரம் அருகில் வந்தபோது நீர் எவ்வளவு உறுதியுடன் எருசலேமுக்குப் புறப்பட்டீர் என்பதை நாங்கள் நினைவுகூருகிறோம் (லூக்கா 9:51). பிதா உமக்குக் கொடுத்தப் பாத்திரத்தை முழுமையாகக் குடித்தீரே!

நிழல்கள் நீண்டபோது நீர் பாடுபடுவதற்கு முன் அவர்களோடு கடைசி போஜனத்தை புசிப்பதற்கு ஆவலோடு சென்றீர்.(லூக்கா 22:15). உம்முடைய ஆத்துமா மாண்பு வாய்ந்த நோக்கத்தைக் கொண்டிருந்தபோதிலும், வேதனை நிறைந்த அமைதியில், உம்முடைய ஆவி காயப்படும்படிக்கு, அவர்களின் சுயநலமான வாதங்களைக் கேட்டீர். அவர்களின் பாதங்களைக் கழுவுவதற்கு ஒவ்வொருவர் முன்னிலையிலும் நீர் முழங்காற்படியிட்ட போது, உம்முடைய தாழ்மையான அடிமைப் பண்பிற்கு மாண்புமிக்க எடுத்துக்காட்டை முன்வைத்தீர். முடிவுவரையில் அவர்களை நேசித்தீர். அவர்களுக்காக நீர் உம்முடைய தந்தையிடம் ஜெபித்தீர். அவர்களுக்காக மட்டுமல்ல, அவர்களின் வார்த்தையின் வழியாக உம்மை விசுவாசிக்கக்கூடிய எங்களுக்காகவும் ஜெபித்தீர் (யோவான் 17).

அன்பார்ந்த ஆண்டவரே அச்சம் தரும் அவ்வேளை, மிகுந்த வேதனையைத்தரும் அவமானத்தை அனுபவிக்கும் நேரம் வந்தபோது, உம்முடைய ஆவி மரண வேதனையால் துக்கம் கொள்வதற்கு கெத்செமனே தோட்டத்திற்கு வந்தீர். ஐயோ ஒரு மணி நேரமாவது உம்முடன் அவர்கள் விழித்திருந்திருக்கலாமே (மத்தேயு 26:40)!

**நம்முடைய நினைவாற்றல்**

அன்பார்ந்த ஆண்டவரே இந்த இரவில் நாங்கள் எங்கள் தியானத்தில் உம்மைப் பின்பற்றுவோம். நீர் காட்டிக்கொடுக்கப்பட்டதை நாங்கள் நினைவுகூருகிறோம். சதிகாரனுடைய முத்தத்தையும் ஆயுதம் தரித்த படைகளையும், விரைந்தோடிய சீஷர்களையும் நாங்கள் நினைவு கூருகிறோம். இருளின் அதிகாரத்தை எதிர்நோக்க நீர் தனித்துவிடப்பட்டீர், ஆயினும் நீர் தனிமையில் இராமல் உம்முடைய பிதா உம்மோடு இருந்தார். ஆனால் இந்த வேளையிலிருந்து அவர் உம்மை இரட்சிக்கவில்லை, ஏனெனில் இந்த வேளைக்காகவே நீர் வந்தீரே. ஒரு குற்றவாளியைப்போல் நீர் கட்டப்பட்டு தீயோர் முன் நடத்தப்பட்டீர். நீர் அவமதிக்கப்பட்ட அந்தக் காட்சிகளையும் பேர் அச்சத்தையும் எங்களால் மறக்க முடியுமா? எப்படியாக மனுஷர் உம்மை அடித்தார்கள், கேலி செய்தார்கள், உமிழ்ந்தார்கள், சாட்டையில் அடித்தார்கள் மற்றும் உம்மைச் சிலுவையில் அறையும் படிக்குத் தீர்ப்பளித்தார்கள்.


விலையேறப்பெற்ற எங்கள் ஆண்டவரே, எங்கள் புரிந்துகொள்ளுதல் குறைவாக இருப்பினும், அந்த இராத்திரி, தேவனுடைய கிருபையினால், ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசி பார்த்தீர் என்பதை நினைவுகூருகிறோம் (எபிரெயர் 2:9). அநீதியுள்ளவர்களுக்கு நீதியுள்ளவராக ஒருமுறை பாவிகளுக்காகப் பாடுபட்டீர், மாம்சத்தில் கொலை செய்யப்பட்டு, ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டீர் (1 பேதுரு 3:18). தேவன் அவர்கள் மத்தியில் வாசம் செய்யும்படிக்கு ஆம் நீர் உன்னதங்களில் ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி மனுஷருக்கு வரங்களை அளித்தீர் (எபேசியர் 4:8).

மீறுதல்களிலும் பாவங்களிலும் மரித்திருந்த எங்களை உம்முடைய பலியினால் ஐசுவரியவான்களாக்கினீர் என்பதையும் நினைவுகூருகிறோம். நாங்கள் பாவமன்னிப்பையும், சமாதானத்தையும், ஜீவனையும் சுவிகார புத்திர பாக்கியத்தையும், மகிழ்ச்சியையும், அன்பையும் அழியாமையின் நம்பிக்கையையும் பெற்றிருக்கிறோம். நீரே எங்களுக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானீர்.

நாங்கள் தேவனுடைய புத்திரர்களாகவும், உமக்கு உடன்சுதந்திரர்களாகவும் இருக்கிறோம். அந்த ஆயிர வருஷமளவும் பூமியின் குடும்பங்களை ஆசீர்வதிக்கக்கூடிய இராஜாக்களும் ஆசாரியர்களாகவும் இருப்பதற்கு நாங்கள் உம்மோடு பாடுபட்டால் உம்மோடு மகிமையும் அடைவோம் (வெளிப்படுத்தல் 5:10).

ஆண்டவராம் இயேசுவே எங்கள் பாத்திரம் வழிந்தோடுகிறது; எங்கள் இருதயம் நன்றியினால் நிரம்பி வழிகிறது! எங்களுடைய ஆத்துமா உம்மை உயர்த்துகிறது மற்றும் எங்கள் ஆவி நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குள் களிகூருகிறது (1 தீமோத்தேயு 1:1). இரட்சிப்பின் தேவனாகிய நீர் நித்தமும் எங்களை நன்மையினால் நிரப்புகிறீர். பாத்திரத்தை ஆசீர்வதிக்கவும், அப்பத்தைப் பிட்கவும், உம்முடைய இரத்தத்திலும், உம்முடைய சரீரத்திலும் ஐக்கியப்படுத்துவதற்கும் அன்பார்ந்தவரே நாங்கள் உம்மை நினைவுகூருவதற்கு சந்தோஷத்துடன் கூடிவருவோம்.

மேலும் தேவனுடைய இராஜ்யத்தில், நாங்கள் உம்மோடு நவமான பாத்திரத்தில் பானம் பண்ணும்வரை அந்தநாள்வரைக்கும் நாங்கள் இந்தப் பண்டிகையை அனுசரிப்போம்!


Noah Amoo, Ghana

தகுதியோடு பங்கெடுத்தல்

# கடினமான உபதேசம்

"அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 6:53).

ஒருநாளுக்கு முன் ஐந்து அப்பங்கள் மற்றும் இரண்டு மீன்களைக் கொண்டு இயேசு ஐயாயிரம் பேர்களுக்கு மேற்பட்டவர்களைப் போஷித்தார். இப்படிப்பட்ட அற்புதங்களினால், அந்தத் திரளான ஜனங்கள் அவரைப் பின்தொடர்ந்தார்கள். இதற்கு முன் அவர் பஸ்காவை அநுசரிக்க, கலிலேயாவிலிருந்து எருசலேமுக்கு விரைந்து சென்றார். அவர் பொது ஜனங்களிடம் பெற்ற நல் மதிப்பினால் ஈர்க்கப்பட்டதைக் கண்ட பரிசேயர்கள் மற்றும் யூத மதத்தலைவர்களுக்குள் மிகுந்த பொறாமை உருவாகியது. இயேசுவின் வாழ்க்கை பணயம் வைக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அவருக்குக் குறிக்கப்பட்ட காலம் இன்னும் வராதிருந்தது (யோவான் 5:16-18). இந்த பஸ்காக்களின் இடையிலுள்ள வருடங்களில், ஏரோதின் கட்டளையின்படி யோவான் ஸ்நானனின் தலை துண்டிக்கப்பட்டு, இதினிமித்தம் அவருடைய சீஷர்கள் குழப்பத்திற்குள் ஆழ்த்தப்பட்டார்கள் (மாற்கு 6:16-29). இதற்கிடையில் இயேசுவின் சொந்த சீஷர்கள் புத்துணர்வு பெறும்படியாக ஒரு கனமான காரியத்தைச் செய்துவிட்டுத் திரும்பினர் (மாற்கு 6:30-31). நடைபெற இருக்கும் பண்டிகையினால் எண்ணிக்கையில் அதிகமான யூதர்கள் எருசலேமுக்கு வந்துகொண்டிருந்தார்கள். பட்டணம் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. இந்த நேரத்தில், அவருடைய உயிரைப்பறிக்க நினைத்தவர்களைத் தவிர்ப்பதற்கு இயேசுவுக்கு எளிதாக இருந்தது. [யோவான் 5:1 மற்றும் யோவான் 6:4 வசனங்கள் தொடர்ந்து ஒன்றுக்குப் பின் ஒன்றாக நடைபெற்ற பஸ்கா என்று சில பதிப்பாசிரியர்களால் கருதப்படுகிறது].

கலிலேயா கடலுக்கு அவர் செல்லும் வழியில், அற்புதங்களைத் தேடி பலர், பட்டணங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் இயேசுவைப்பின் தொடர்ந்தார்கள். எருசலேமுக்கும் கலிலேயாவுக்கும் இடையிலுள்ள தூரம் 70 மைல்கள். இதைக் கடக்க மூன்று நாள் நடை பயணம் சென்றார்கள். பசியும், விடாய்த்திருந்த திரளான ஜனங்கள்மேல் இரக்கம் கொண்டவராக மாலையில் ஐந்து அப்பமும், இரண்டு மீன்களைக்கொண்டு அவர்களைப் போஷித்தார். அதற்குப்பின், அவரை இராஜாவாக ஆக்க வேண்டுமென்று விரும்பிய ஜனங்களைத் தவிர்ப்பதற்காகவும், பன்னிருவரையும் விட்டுவிட்டு மலைகளுக்குத் தப்பிச்சென்றார். [மற்றவர்களை அப்போஸ்தலர்கள் என்று மற்ற குறிப்புகள் இருந்தாலும், இயேசு தேர்ந்தெடுத்தவர்கள், மொத்தத்தில் பன்னிருவர் என்று மத்தேயுவும் மாற்குவும் கூறுகிறார்கள் மத்தேயு 26:20; மாற்கு 11:11] இரவில் கடலின்மேல் அவர் அற்புதமாக நடந்து, சீஷர்களிடம் சேர்ந்து, மற்ற புறத்திலுள்ள கப்பர்நகூமுக்கு அவர்களோடு கரையேறினார். விடிந்தவுடன் சில சீஷர்களும், பரிசேயர்களும் இயேசுவோடு ஜெப ஆலயத்திற்கு வந்தார்கள். மனுஷருடைய இருதயங்களை வாசிக்கக்கூடிய ஆற்றலை இயேசு பெற்றிருந்ததால், கலிலேயாவின் மறுமுனைக்கு இவர்கள் வந்த நோக்கத்தை அவர் எளிதில் புரிந்துகொண்டார். "நீங்கள் மனுஷக் குமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை" (யோவான் 6:53) என்று இயேசு ஒரு சிறிய உரையாடலின்போது கூறினார்.

இந்த இரகசியத்தை தம்முடைய சீஷர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு பஸ்கா காலம் தவிர வேறெந்த காலம் ஏற்றதாக இருக்கும்? ஆயினும் மாம்ச இஸ்ரயேலர்களினால் இந்த வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை இது கடினமான உபதேசம் என்றார்கள் (யோவான் 6:60). எல்லா மனுஷரும், ஆனால் முந்தி யூதர்களுக்குக் காணப்பட்ட இரட்சிப்புக்கு அவர்களின் இருதயம் ஆயத்தமாக இருக்கவில்லை. அவர்களைச்சுற்றி அந்த வெளிச்சம் பிரகாசித்தது. ஆனால் அவர்களின் பெருமை மற்றும் வணங்கா கழுத்துள்ள தன்மை அதைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களைத் தடுத்தது (யோவான் 3:19; 1:5)

**முரண்பட்ட உள்போக்கு வெளிப்பட்டது:**

அப்பத்தினாலும் மீன்களினாலும் போஷிக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள், சில யூதர்கள் இயேசுவை தங்களுடைய இராஜாவாக ஏற்படுத்த எண்ணினார்கள். ஆனால் அழிவில்லா மாம்சத்தைக் குறித்து அவர் பேசினபோது (யோவான் 6:27). உடனடியாக அவர்கள் அவருக்கு எதிர்த்து நின்றார்கள். சிலர் தங்களுக்குள்ளே

முறுமுறுத்தார்கள். மற்ற சிலர் நித்தியத்திற்கும் அவரை விட்டுவிட்டார்கள். இயேசு அவர்களின் மாம்சத்தின் விருப்பங்களையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்தபின் நியாயப் பிரமாணத்தால் தவிர்க்கப்பட்ட ஒரு காரியம்போல தோன்றுவதைச் செய்ய சொன்னதினால் அவர்கள் சண்டையிடுகிறவர்களாக ஆனார்கள். ஆவிக்குரிய காரியங்களை இவர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை.

எகிப்திலிருந்து வெளியேறிய காலமுதல் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தை அடையும் வரையில் இந்த இஸ்ரயேலர்கள் கணிக்க முடியாதவர்களாக இருந்தார்கள். எகிப்தில் அவர்கள் பஸ்கா அநுசரிப்பதற்குமுன் மோசே கட்டளையிட்டபடி எல்லாம் செய்தார்கள். ஆயினும் அடிமை தனத்திலிருந்து அவர்களை மீட்டதற்காக சிவந்த சமுத்திரத்தில் அவர்கள் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அதற்குப்பின் தேவன் அவர்களுக்கு மன்னா கொடுத்தபோது, மற்றவகையான உணவுகள் வேண்டுமென்று குற்றஞ்சாட்டினார்கள் (எண்ணாகமம் 11:4-10). வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அவர்கள் வந்தபோது, ஆதியில் தேவன் நியாயாதிபதிகளின் வழியாக ஆட்சி செய்ததில் மனநிறைவோடிருந்தார்கள். அதற்குப்பின் அண்டை தேசங்களின்மேல் பொறாமை கொண்டு தங்களுக்கும் ஒரு இராஜா வேண்டுமென்று உறுதியோடு கூறினார்கள் (1 சாமுயேல் 8:11-19). அவர்கள் இயேசுவின் மரணத்தை விரும்பிக்கேட்டபோது, அவர்களின் செயல்களின் எல்லா விளைவுகளையும், தாங்கிக்கொள்ள ஆயத்தமாக இருந்தார்கள் என்று அவர்களின் இறுமாப்பு அறிக்கை செய்ய வைத்தது (மத்தேயு 27:25).

அவர் செய்த அற்புதங்களாலேயே அநேகர் ஈர்க்கப்பட்டு அவரைப் பின்பற்றினார்கள் என்று நம்முடைய ஆண்டவர் நன்கு அறிந்திருந்தார். ஆயினும், நித்திய ஜீவனுக்குரிய வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி அவர் விரும்பினார் (யோவான் 6:26, 63). ஐயோ, அநேகரால் இந்த உபதேசத்தை புரிந்துகொள்ள முடியாமல் ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்றனர். அவர்கள் வெதுவெதுப்பாய் இருந்தனர்.

**உண்மையில் மாம்சம்**

"இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று யோவான் ஸ்நானகன் அறிவித்தார். முதல் பஸ்காவின்போது இஸ்ரயேல் ஜனங்கள் ஐந்து நாட்களுக்கு முன் ஓர் ஆட்டுக்குட்டியை தங்களுடைய வீட்டிற்கு எடுத்துச்சென்றபின் பஸ்கா நாளிலே அதை அடித்தார்கள். நிஜத்தில், ஆண்டவராம் இயேசு தம்மை ஓர் இரட்சகராகவும், இராஜாவாகவும் இஸ்ரயேலர்களிடம் தம்மை ஒப்புக்கொடுத்தார் (யோவான் 12:12-15). இந்த உலகத்தின் பாவத்தைப் போக்க இவர் மட்டுமே பாத்திரவானாக இருந்தார்! அவர் மட்டுமே பரிசுத்தரும், பாவத்தால் கறைபடாத வருமாக இருந்தார். ஆதாமுக்கு ஈடு கிரயமாக தம்முடைய ஜீவனையே கொடுத்து நித்திய ஜீவனைக் கொடுக்க வல்லமையுள்ளவராக இருந்தார் (யோவான் 6:49, 50).

இயேசுவின் முதல்வருகையில் இந்த மாம்சத்தில் பங்குபெறுவதற்கு சிலர் மட்டுமே ஆயத்தமாக இருந்தார்கள். இதற்கு இணங்கினவர்கள் மட்டுமே அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ள முடியும். பெரும்பாலானோர், அவருடைய "மாம்சத்தைப்" புசித்து, "இரத்தத்தை" பானம் பண்ண ஆயத்தமாக இருக்கவில்லை. இயேசு அடையாளமாகப் பேசினார் என்று அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவருடைய மூன்றரைவருட ஊழியம் அவர்களுக்கு வேறுப்பட்டதாக இருந்தது. எப்படிப்பட்ட சிறப்பான பாக்கியத்தை அவர்கள் பறி போகவிட்டார்கள்! ஆயிர வருட யுகத்தில், இந்த முழு மனுக்குலத்தோடு அவரை அறிந்துகொள்வதற்கான வாய்ப்பைப்பெறுவார்கள். "அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்" (மத்தேயு 8:11).

இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட யூதர்களுக்கு, இயேசுவின் மணவாட்டியின் பகுதியாக இருப்பதற்கு ஒரு வாய்ப்பு கையளிக்கப்பட்டது. அதுபோல கொர்நெலியு மற்றும் அவருடைய வீட்டார் ஞானஸ்நானம் பெற்றபோது, சுவிசேஷ யுக ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு புறஜாதிக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அந்நேரம் முதல், சிறுமந்தை அங்கத்தினர், ஆண்டவரின் மரணத்தை நினைவுகூரும்படிக்கு, அடையாளமான அவருடைய சரீரத்தினால் போஷிக்கப்படுகிறார்கள். அவருடைய சரீரத்தை அடையாளப்படுத்தும் அந்த அப்பம் அவருடைய மரணத்தை நினைவு கூருகிறது. யூதர்களின் பஸ்காவுக்குப்பதிலாக நம்முடைய ஆண்டவர் தம்முடைய சீஷர்களுக்கு இந்தப் புதிய நினைவுகூருதலை ஏற்படுத்தினார் என்று நம்புகிறோம். ஏனெனில் பஸ்கா ஆடுகள் அடிக்கப்படும் நேரத்தில் இயேசு சிலுவையில் மரித்து, இந்த நிழலை நிறைவேற்றுவதை சித்தரிக்கிறது (1 கொரிந்தியர் 5:7, 8). இந்தப் பண்டிகையை அநுசரிக்கும் யாவரும் பழைய புளித்த மாவை (yeast)

புறம்பே களைந்துப்போட வேண்டுமென்று பவுல் கூறுகிறார். புளிப்பு, பாவத்திற்கு ஓர் அடையாளம். நிழலான பஸ்காவை அநுசரிக்கும்போது, ஏழு நாட்களுக்கு முன்னே எல்லாவிதமான புளிப்புகளையும் தங்களுடைய வீடுகளை விட்டு அகற்ற வேண்டுமென்று தேவன் யூதர்களுக்குக் கட்டளையிட்டார். "உண்மையான மாம்சத்தை" புசிக்கக்கூடியவர்கள் நிஜமாக, எல்லாவிதமான பாவங்களையும் களைந்து போட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

நித்திய ஜீவனைப்பெறுவதற்கு மற்றொரு முக்கியமான ஆக்கக்கூறு, இயேசுவின் இரத்தத்தைக் "குடிப்பதாகும்." மாம்சத்தைப் புசிப்பது அல்லது இரத்தத்தைப் பானம் பண்ணுதல் மட்டுமே நித்திய ஜீவனை அளிக்காது. நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள இரண்டையுமே செய்ய வேண்டும். பாத்திரத்திலுள்ள இயேசுவின் இரத்தம், நம்முடைய சுத்திகரிப்பையும், நீதிமானாக்கப்பட்ட நிலையையும் அடையாளப்படுத்துகிறது (ரோமர் 5:9). கூடுதலாக, இயேசு தம்முடைய சீஷர்களிடம் பேசப்பட்ட பாத்திரமானது, அவருடைய மரணத்தின் பாடுகளுக்குள் பங்குபெறுவதற்கான ஆயத்தத்தைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகிறது (மத்தேயு 20:22). நிழலில், சங்காரத் தூதனிடமிருந்து, தலைச்சன் பிள்ளைகள் பாதுகாக்கப்பட, இஸ்ரயேலர்கள் தங்களுடைய வீட்டின் நிலைக்கால்களில் இரத்தத்தைத் தெளித்தார்கள் - இது நீதிமானாக்கப்படுவதற்கான மற்றொரு அடையாளமாகும். நிஜமான தலைச்சன்கள், அவருடைய சீர அங்கத்தினர்கள், சொல்லர்த்தமான நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்காமல், தங்களுடைய "என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா" (நீதிமொழிகள் 23:26) என்ற யேகோவா தேவனின் வேண்டுகோளுக்கு இணங்க இருதயத்தின் நிலைக்கால்களில் தெளிக்க வேண்டும். நம்முடைய இருதயம் தொடர்ந்து மூடப்பட்டிருப்பதற்கு அவர் சிந்தின இரத்தத்தின்மேல் சார்ந்து அவருடைய சகல கற்பனைகளையும் ஜாக்கிரதையாகக் கை கொள்ளுவதற்கு முழுமையான சம்மதத்தை வருஷந்தோறும் இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணுவதை செயல்முறையில் காட்டுகிறது (எபிரெயர் 10:22; நீதிமொழிகள் 4:23).

**பொறுப்புகள்:**

இப்போதும் தேவனுடைய இராஜ்யத்தில் அப்பத்திலும், பாத்திரத்திலும் பங்கு பெறுபவர்களுக்கு நித்திய ஜீவன் வாக்களிக்கப்பட்டுள்ளது. ஆயினும் சபைக்கும், நித்திய ஜீவனுக்கும் ஓர் உயர்வான நிலை உறுதியளிக்கப்பட்டது – அழியாமை (ரோமர் 2:7). வருடந்தோறும் இந்த அடையாளங்களில் பங்கெடுப்பவர்களுக்கு இந்த உறுதி அளிக்கப்பட்டுள்ளதா? இல்லை இந்த நிபந்தனைகளைக் கடைபிடிக்காமல், இந்த அடையாளங்களைப் புசித்துக் குடித்தாலும், எதிர் பார்க்கப்படும் வெகுமதி அளிக்கப்படாது. இந்தத் தகுதிகளை அடையாதவர்களைப்பற்றி அப்போஸ்தலனாகிய பவுல், 1 கொரிந்தியர் 13:28-30-ஆம் வசனங்களில் பேசுகிறார்.

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில் அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதி உள்ளவர்களுமாயிருக்கிறார்கள்."

இதில் பங்கெடுப்பவர்கள் அவர் மகிமையில் தம்முடைய பரிசுத்தமான தூதர்களோடு வரும் வரையில், ஆண்டவருடைய மரணத்தைத் தெரிவிக்க வேண்டும் (மத்தேயு 25:31). சரியான இருதயத்தில், சரியான நோக்கத்துடன் இந்த அடையாளங்களைப் புசிக்கக்கூடியவர்கள், அவருடைய மரணத்தின் நற்பதிப்புக்கு (புண்ணியங்களுக்கு) தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய ஆண்டவரின் ஈடுபலியையும், ஐக்கியத்தின் கட்டையும், கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினராக இருக்கக்கூடியவர்கள் மத்தியில் தோன்றுகிற அன்பையும் நினைவுகூரும்படியாக அந்த அப்பத்தைப் புசித்தார்கள். ஆண்டவருடைய பாடுகளில் பங்குபெறுவதற்கு எவ்வளவு ஆயத்தமான நிலையில் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்கு அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணுகிறார்கள். நம்முடைய ஓட்டத்தை மரணத்தில் நிறைவு செய்யும்வரையில், நாம் வருடந்தோறும் ஆசரிக்கும் நினைவுகூருதல் நம்முடைய உடன்படிக்கையின் பொருத்தனைகளைத் தொடர்ந்து புதுப்பிக்கக்கூடிய சிலாக்கியமாகப் பெற்றிருக்கிறோம்.

"ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாய் இருக்கும்படிக்கு பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடுமல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை

ஆசரிக்கக்கடவோம். விபசாரக்காரரோடே கலந்திருக்கக்கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன். ஆனாலும், இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர் இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக்கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப்போக வேண்டியதாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரர் என்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக் காரரயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது; அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது" (1 கொரிந்தியர் 5:7-11).

புளிப்பு கட்டுக்கடங்காத மாம்சத்தின் இச்சைகளை மட்டுமல்ல, இது தவறான உபதேசங்களையும், போதனைகளையும் குறிக்கும் என்று நம் ஆண்டவர் கூறுகிறார் (மத்தேயு 16:6). நாம் நம்முடைய சரீரங்களையும், அவருடைய வார்த்தைகளையும் கூடுமானளவுக்கு பரிசுத்தமாயும், கலப்படமில்லாமலும் காத்துக்கொள்ள வேண்டுமென்று பிதாவாகிய தேவனும், ஆண்டவராம் இயேசுவும் நம்மை எதிர்பார்க்கிறார்கள் (எபேசியர் 5:27). நிழலில் பஸ்காவின் ஏழு நாட்களுக்கும் புளிப்பை தங்களுடைய வீடுகளிலிருந்து அகற்ற வேண்டுமென்று யூதர்கள் கட்டளைப் பெற்றிருந்தார்கள். நிஜத்திலும் இதைச் சொல்லர்த்தமாக எடுத்துக்கொள்ள வேண்டுமா? நினைவுகூருதலுக்கு ஆண்டவரோடு பந்தியிருப்பதற்காக ஏழு நாட்களுக்குமட்டுமே நம்முடைய இருதயங்களை ஆயத்தமாக்கிக்கொள்வதற்கு நாம் எதிர்பார்க்கப்படுகிறோமா? நிச்சயமாக இல்லை! நித்தமும், எல்லா பாவத்தையும் நம்முடைய ஆவிக்குரிய உடல் நலத்தை ஒருவேளை, நம்முடைய சரீர ரீதியான சுகத்தையும் கெடுக்கக்கூடிய மாம்சத்தின் இச்சைகளையும் நாம் புறம்பே அகற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**முடிவான சிந்தனைகள்:**


இந்த வருடத்தில், நாம் நினைவுகூருதலில் பங்கெடுக்கும்போது, வரக்கூடிய மற்றொரு அர்ப்பணிக்கப்பட்ட வருடத்திற்கு நாம் நம்முடைய பொருத்தனைகளைப் புதுப்பித்துக்கொள்கிறோம் என்பதை கவனத்தில் வைத்துக்கொள்ளலாம். அடுத்த வருடம் நாம் எடுத்து வைக்கக்கூடிய ஒவ்வொரு அடிகளும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அடையாளமாக இயேசுவின் இரத்தத்தைக் குடிப்பது நம்மை நீதிமானாக்கி, பந்திக்கு வருவதற்கு நம்மைத் தகுதிப்படுத்துகிறது. அடையாளமாக அப்பத்தைப் புசிப்பது, (இயேசுவின் வார்த்தைகள் யோவான் 6:63). நம்முடைய சகோதரர்கள் அவர்களின் நடையில் நாம் உதவிசெய்யும்படிக்கு வழிநடத்துகிறது.

கடந்த வருடத்தைப் பிரதிபலிக்கும்படியாக, கீழ்க்காணும் இந்தக் கேள்விகளுடன் இந்த நினைவுகூருதலுக்குள் நாம் பிரவேசிப்போம் (1) சகோதரர்களின் ஐக்கியத்திலும், அவர்களின் மகிழ்ச்சி மற்றும் உபத்திரவங்களில் பங்கெடுப்பதிலும், அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியில் எடுக்கக்கூடிய அக்கறையிலும், அவர்களுக்காக ஜெபிப்பதிலும், என்னுடைய அர்ப்பணிப்பை நான் வெளிப்படுத்தினேனா? (2) கேட்கக்கூடிய காதுகள் உடைய யாவருக்கும் சத்தியத்தைப் பகிர்ந்துகொள்ளவும், அதைப் பாதுகாக்கவும் எப்போதும் ஆயத்தமாக இருக்கிறேனா? (3) ஆண்டவருக்காகவும், சத்தியத்திற்காகவும் நான் உபத்திரவப்படுவதற்கு ஆயத்தமாக இருக்கிறேனா? நம்மை நாமே உருக்கமாக ஆராய்ந்துப் பார்க்கலாம். நம்மால் சரிசெய்யக்கூடிய தவறுகளைச் சரிசெய்து, சரிசெய்ய முடியாத தவறுகளுக்காக மன்னிப்பு வேண்டி ஆண்டவரின் மேஜையில் தெளிவான மனசாட்சியோடு பங்கெடுக்கலாம்.

ஒற்றுமையை மேம்படுத்துதல்

# எண்ணெய் ஊற்றப்பட்டபோது

"மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார் . . . இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல" (ஆதியாகமம் 28:16, 17).



**Piotr Krajcer. Poland**

வானத்தில் வைக்கப்பட்டிருந்த ஓர் ஏணியில் தூதர்கள் ஏறுகிறதையும் இறங்குகிறதையும், யாக்கோபு சொப்பனம் கண்டபின், இந்த வசனப்பகுதி அவரால் அறிவிக்கப்பட்டது. யாக்கோபு எழுந்த போது அவர் என்ன செய்தார் என்று உங்களுக்கு ஞாபகம் உள்ளதா? "அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின்கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி, அதின்மேல் **எண்ணெய் வார்த்து,** அந்த ஸ்தலத்திற்குப் பெத்தேல் என்று பேரிட்டான்" (ஆதியாகமம் 28:18, 19). பிற்பாடு, தேவன் யாக்கோபுக்கு இதை ஞாபகப்படுத்தினார். "நீ **தூணுக்கு அபிஷேகஞ் செய்து,** எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே" (ஆதியாகமம் 31:13).

தேவன் இஸ்ரயேலுக்கு நியாயப் பிரமாணத்தைக் கொடுத்தபோது, பொருட்களையும், ஜனங்களையும் சுத்திகரிப்பதற்கு அபிஷேகத் தைலம் பயன்படுத்தப்பட்டது. "அதனால், பரிமள தைலக்காரன் செய்வதுபோல, கூட்டப்பட்ட பரிமளதைலமாகிய சுத்தமான அபிஷேகத் தைலத்தை உண்டு பண்ணுவாயாக . . . அதினாலே ஆசரிப்புக் கூடாரத்தையும், சாட்சிப்பெட்டியையும் . . . ஆரோனும் அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அவர்களை அபிஷேகம்பண்ணி, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவாயாக" (யாத்திராகமம் 30:25-30).

இந்த அபிஷேகத்தைலம் தேவனுடைய பணிக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டது, மற்றெந்த காரியத்திற்கும் அதை அவர்கள் பயன்படுத்தவில்லை. அதில் 1500 சேக்கல் நிறையுள்ள சுத்தமான வெள்ளைப்போளம், சுகந்த கருவாப்பட்டை, வசம்பு மற்றும் இலவங்கப்பட்டை ஒரு குடம் எண்ணெயில் கரைக்கப்பட்டது. இந்த அபிஷேகாத்தைலத்தை நாம் இன்று சேமித்து வைக்க வேண்டுமானால், இரண்டு வாளிகள் (bucket) தேவைப்படும். ஆலயத்தையும் ஆசாரியர்களையும் சுத்திகரிக்கத் தேவைப்படும் எண்ணெயின் அளவை இது தருகிறது.

இந்த எண்ணெய் பரிசுத்த ஆவியை மிக அழகாக எடுத்துக்காட்டுகிறது. "நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்" (அப்போஸ்தலர் 10:38). நம்முடைய ஐக்கியத்தின்போது, அவருடைய பிள்ளைகள் அனைவர்மேலும் நிறைவாய்ப் பொழியப்படுகிறது. இந்த ஆவியின் மூலமாக நாம் சுத்திகரிப்பை அனுபவிக்கிறோம். பொதுவான சகோதர ஐக்கியம் நமக்குள் தேவ ஆவி கிரியை செய்ய அனுமதிக்கிறது.

**கூடுகையின் முக்கியத்துவம்:**

"இதோ சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" (சங்கீதம் 133:1). அடிக்கடி மற்றும் விரிவாக்கப்படும் கூடுகையின் முக்கியத்துவத்தை தாவீதின் வார்த்தைகள் குறிப்பிடுகிறது. "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? அது ஆரோனுடைய சிரசின் மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கு" (சங்கீதம் 133:1, 2).

இந்த உலகம் முழுவதும் சகோதரர்கள் மத்தியில் மாநாடுகளே கூடுகைக்கான பொதுவான வழியாகும். கூடுகையில் கலந்துகொள்ளும் ஒரே நாட்டிலுள்ளவர்கள், ஒருவரையொருவர் அறிந்தவர்களாக பொதுவான பழக்கவழக்கங்களைப் பகிர்ந்துகொள்வார்கள். ஆயினும் இந்தியா ஆப்பிரிக்கா ஐரோப்பா சைபீரியா ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய வெவ்வேறு நாடுகளில் உள்ளவர்கள் பல்வேறு இடங்களிலிருந்து வந்து கூடுகிறார்கள். எடுத்துக்காட்டாக ஒவ்வொரு நாட்டிற்கும் விதவிதமான வழக்கங்கள் விதவிதமான ஆடை அணிகலன்கள், விதவிதமான நிறங்கள் இருந்தபோதிலும் அவர்களனைவரும் ஒருமித்திருப்பதற்குக் கடும் முயற்சிகள் எடுக்கின்றனர். ஒவ்வொருவருடைய வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ள கற்றுக்கொள்கிறார்கள். ஏனெனில் அவர்கள் விசேஷவிதமாக ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதே காரணமாக இருக்கலாம்.

ஒரு குறுகிய காலத்தில் வேறுபாடுகளை மேற்கொண்டு, ஒருவரையொருவர் நேசித்து

புரிந்துகொள்ள கற்றுக்கொடுப்பதற்கு சகோதரர்களை அனுமதிப்பது எது? இது தேவனுடைய சத்தியத்தின் பொதுவான காரணமே. பெந்தெகொஸ்தே நாளின்போது, ஒருமித்துக் கூடியிருந்த சீஷர்களுக்குப் பரிசுத்த ஆவியை அனுப்பினார் (அப்போஸ்தலர் 2:2-4, 16-18, 33, 38). இரண்டு அல்லது மூன்று பேருக்கு மத்தியில் அவர் இருப்பதாக இயேசு கூறுகிறார் (மத்தேயு 18:20). சகோதரர்களுக்கு மத்தியிலுள்ள பிரிவினைகள், மேம்படுத்துவதுமில்லை மற்றும் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருவதுமில்லை. சத்தியத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று சாக்குப்போக்குகளினால், பல பிரிவுகள் ஏற்படுகிறது. ஆனால், உண்மையில், சத்தியத்தைக்குறித்த ஒருவருடைய இருதயத்தை அல்லது நம்பிக்கையைப் பாதுகாப்பதன் விளைவே இந்தப் பிரிவினைகளுக்கான உண்மையான காரணமாகும். "நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ்சொல்லுதலும் குறைவுள்ளது . . . இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்" (1 கொரிந்தியர் 13:9, 12) என்று அப்போஸ்தலர் கூறுகிறபடி வேதமாணவர்களாகிய நாம் தெய்வீக திட்டத்தின் சில விவரங்களை சற்று வித்தியாசமாகக் காணலாம். ஆனால் இது பிரிவினைகளையும் குற்றங்காணும் மனப்பாங்கையும் ஏற்படுத்தக்கூடாது.

நாம் ஒருமித்துக்கூடுகையில், அநேகக் காரியங்களைக் கேட்பதற்கும் கோணங்களைப் பரிமாறிக்கொள்வதற்கும், சில நேரங்களில் நம்முடைய சொந்தக் கருத்துக்கள் அனுமதிக்கப்படும். இது சத்தியத்தின் ஒத்திசைவையும் அழகையும் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு நம்மை இயலச்செய்யும். இது விலையேறப்பெற்ற தைலமாகிய பரிசுத்த ஆவியை நம்மேல் பொழிவதற்கு அனுமதிக்கும். பிரதான ஆசாரியனாகிய ஆரோனின் தலையில், அந்தத் தைலம் ஊற்றப்பட்டபோது, அது முதலில் அவருடைய தாடிகளில் வழிந்து, அவர் அங்கியில் ஓடியது.

இந்த அபிஷேகங்கள் ஆசாரியருடைய முழு சரீரத்திற்கும் மட்டுமல்ல, அங்கியையும் நனைத்தது. இயேசு கிறிஸ்துவின் சபையாகிய நாம் ஆசாரியனுடைய சரீரத்தை அடையாளப் படுத்துகிறோம். "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" (ரோமர் 12:5). நாம் தனித்து வாசம் செய்வதைக்காட்டிலும் ஒருமித்து வாசம் செய்கையில் பரிசுத்த ஆவியினால் அதிகபட்சமான ஆதாயம் பெறுகிறோம்.

சங்கீதம் 133, போலந்து நாட்டு சகோதரர்களுக்கு ஒரு விசேஷித்தப் பொருளை உடையதாக உள்ளது. பெரும்பாலும் அனைவருக்கும் இது மனப்பாடமாகத் தெரியும். மாநாட்டின் முடிவிலும், பெரிய கூடுகைகளின் முடிவிலும் பலமுறை இது பாடப்படுகிறது. ஓய்வுபெற்ற இல்லத்தில் வசித்துவந்த மற்ற சகோதரர்கள் மத்தியில் வாழ்ந்துவந்த ஒரு சகோதரரால் இந்த இன்னிசை அமைக்கப்பட்டது. பாடும்படியாக இந்தச் சங்கீதம் எழுதப்பட்டிருந்தது. இதையே செய்யும்படி அப்போஸ்தலர் நம்மை ஊக்குவிக்கிறார். "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி" (எபேசியர் 5:19).

"இதோ சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும், எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்" (சங்கீதம் 133).

**இயேசுவின் அபிஷேகம்:**

எண்ணெய் ஊற்றப்பட்டதோடு மற்றும் ஒரு சம்பவம் இணைக்கப்படுகிறது. "இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில் இருக்கையில், ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற பரிமளதைலமுள்ள வெள்ளைக்கல்பரணியைக் கொண்டுவந்து, அவர் போஜனபந்தியிலிருக்கும்போது, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள். அவருடைய சீஷர்கள் அதைக் கண்டு விசனமடைந்து: இந்த வீண்செலவு என்னத்திற்கு? இந்தத் தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றார்கள். இயேசு அதை அறிந்து, அவர்களை நோக்கி: 'நீங்கள் இந்த ஸ்திரீயை ஏன் தொந்தரவுப்படுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள். தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன். இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது. இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள்

செய்ததும் சொல்லப்படும்'" (மத்தேயு 26:6-13) என்றார்.

சுவிசேஷகனாகிய யோவான் விவரிக்கிறபடி அந்த ஸ்திரீ லாசருவின் சகோதரியாகிய மரியாள் (யோவான் 12:3). மரியாள் இயேசுவின் பாதங்களில் தைலத்தை ஊற்றி அவளுடைய தலை மயிரினால் துடைத்தாள் என்று யோவான் கூறினாலும், தைலம் இயேசுவின் தலையில் ஊற்றப்பட்டதாக மத்தேயு ஒரு சம்பவத்தை விவரிக்கிறார். இந்த இரண்டு சம்பவங்களும் எதிரிடையானதும் அல்ல, சில விமர்சகர்கள் கருதுவதுபோல இந்த இரண்டு சம்பவங்களும் தனிப்பட்ட இரண்டு சம்பவங்களா அல்ல என்பதை இதைப்பற்றி ஒரு நெருங்கிய பார்வை காட்டுகிறது கூடுதலாக, மாற்கு 14:3-7-இல் பதிவு செய்யப்பட்ட மற்றொரு சம்பவம் அதே பரிமள தைலத்தைப்பற்றி பேசுகிறது. மூன்று பதிவுகளும் பெத்தானியாவில் சம்பவித்ததாகக் கூறுகிறது.

மரியாள், வெள்ளைக்கல் பரணியை உடைத்து தைலத்தை ஊற்றினாள் (மாற்கு 14:3). "என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள்" (மாற்கு 14:8). அவருடைய தலையில் மட்டுமல்ல, அவருடைய பாதங்களிலும் ஊற்றி, அவளுடைய தலை மயிரினால் துடைத்தாள் (யோவான் 12:3). அவள் எதற்காக இதைச் செய்தாள்? ஒருவேளை அந்நாட்களின் விருந்தின்போது, விருந்தாளிகளின் தலைகளையும், பாதங்களையும் அபிஷேகிக்கும் வழக்கத்தோடு இது தொடர்புடையதாக இருந்திருக்கலாம். இந்த வழக்கம் சங்கீதம் 23:5-ஆம் வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. "என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால்அபிஷேகம்பண்ணுகிறீர்"

இந்த வழக்கத்தைப்பற்றி, இயேசுவின் ஊழியத்தின் துவக்கத்தில் இயேசுவை விருந்துக்கு அழைத்த பரிசேயரோடு இயேசு சம்பாஷித்த உரையாடலில், லூக்கா பதிவு செய்திருக்கிறார். "ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, சீமோனை நோக்கி: இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே; நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர்த் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ்செய்யவில்லை, இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள். **நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை,** இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள். ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன்: இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான் என்றார்" (லூக்கா 7:44-47). இந்த ஸ்திரீ மகதலேனா மரியாள் என்று பல விமர்சகர்கள் கருதுகிறார்கள். ஆனால் அவளுடைய பெயர் இங்குக்குறிப்பிடப்படவில்லை.

அபிஷேக தைலம் தலையின்மேல் ஊற்றப்பட்ட பழக்கம் இந்த இரண்டு சம்பவங்களிலும் குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும். இந்த இரண்டு விஷயங்களிலும் அன்பினால் இந்த அபிஷேகம் நடந்ததாக இயேசு கூறுகிறார் (லூக்கா 7:47; மாற்கு 14:9). ஆண்டவர்மேலுள்ள அன்பை செயலினால் வெளிக்காட்டுவதே தைலம் ஊற்றுவது என்று ஒரு கூடுதலான பகுதி கருதுகிறது. உன்னதப்பாட்டு எவ்வாறு மணவாட்டியை அழைக்கிறது என்று கவனியுங்கள். "உமது நாமம் ஊற்றுண்ட பரிமளதைலமாயிருக்கிறது; ஆகையால் கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள்" (உன்னதப்பாட்டு 1:3).

ஆண்டவர்மேல் வைத்திருந்த மிகுதியான அன்பையும், அவள் சகோதரனாகிய லாசருவை எழுப்பினதற்கான அவளுடைய நன்றியறிதலான உணர்வுகளையும் மரியாள் வெளிப்படுத்தினாள். அந்த வீடு முழுவதும், சுகந்த வாசனையால் நிறைந்ததும், நம்முடைய ஆண்டவரின் முழு சரீரத்திற்குள் ஊடுருவியதுமான அந்தத் தைலம் விலையேறப் பெற்றதாக இருந்தது. ஆண்டவரின் வாழ்க்கையின் இறுதி நொடிகள்வரைக்கும் அவரோடுகூட இருக்குமளவுக்கு மிக வலிமையுள்ளதாக இருந்திருக்க வேண்டும்.

**பாராட்டின் பாதிப்பு:**

மரியாளின் செயலை யூதாஸ் கடுமையாகக் குற்றஞ்சாட்டினான். "இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன" (யோவான் 12:5). இந்தக் கடிந்து கொள்ளுதலுக்குப் பொதுவாக நாம் இரக்கம் காட்டுவதில்லை. ஆனால் இந்நாளில் இந்தத் தைலத்தின் மதிப்பு எவ்வளவாக இருக்கும்? ஒருநாள் கூலி, ஒரு பணமாக இருந்தது (திணாரி). இந்நாளில் நாற்பது டாலர்களாக இருக்கலாம். இவ்வாறாக 300 திணாரி, 12,000 டாலர்களாகும். ஒரு சகோதரி, உங்கள் சபைக்கு வருகைத்தந்த ஒரு பேச்சாளரின் தலையில், 12,000 டாலர்கள் மதிப்புள்ள தைலத்தை ஊற்றினால் நீங்கள் என்ன சொல்லுவீர்கள்?

சில நேரங்களில் நாம் மற்ற ஜனங்களின் பரிசுகளைக் குற்றஞ்சாட்டுகிறோம். அவர்கள் தங்களுடைய பணம் அல்லது நேரத்தை எவ்வாறு சிறந்தமுறையில் செலவழிக்க வேண்டுமென்று நாம்

நன்கு அறிந்திருப்பதாக எண்ணிக்கொள்கிறோம். ஆனால் இதைக்குறித்து சிந்தியுங்கள். நம்மிடம் இருப்பதை நாம் எவ்வளவு கொடுக்கிறோம்? நம்மைநாம் ஆராய்ந்து பார்க்கலாம். மரியாள் தனக்குள்ளதை எல்லாம் கொடுத்தாள் - வருங்காலத்தில் அவளுடைய வரதட்சணை. நம்முடைய சகோதரர்களுக்கு நம்முடைய பாராட்டைக் காண்பிக்க விருப்பார்வத்துடன் இருக்கிறோமா? இதைத் தான் ஆண்டவர் நம்மிடம் கேட்கிறார் - நம்முடைய சகோதரர்களை அபிஷேகிக்க, நம்முடைய முழு ஜீவனையும் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் (யோவான் 15:13).

யூதாஸ் நம்முடைய ஆண்டவரை முப்பது வெள்ளிக்காசுக்காக விற்றான் - 100 திணாரி – மரியாளினால் இயேசுவுக்கு அளிக்கப்பட்ட விலையேறப்பெற்ற தைலத்தின் மூன்றில் ஒரு பகுதி. மரியாள் இயேசுவுக்கு, அந்த நொடியில் கொடுத்த அந்த மகிழ்ச்சி, 300 திணாரிகளைக் காட்டிலும் மிக அதிகமாக இருந்தது. ஆனால் யூதாசுக்கு ஆண்டவரின் வாழ்க்கை முப்பது வெள்ளிக்காசுகளுக்குக் குறைவான மதிப்பு பெற்றிருந்தது. தேவனுடைய காரியங்கள் என்று வரும்போது, உலகத்தின் பொருளாதார கொள்கைகளை அங்குப் பொருத்தக்கூடாது. எலியாவின் காலத்தில், சாறிபாத் விதவைக்கு ஆண்டவர் கொடுத்த ஒரு பாத்திரம்போல, கடன்கொடுத்து உதவுபவர்களுக்கு தேவன் கொடுக்கிறார். அவளுடைய பாத்திரத்தில் எண்ணெய் குறையவில்லை (1 இராஜாக்கள் 17:10-16).

ஆண்டவருக்காக நாம் செய்யக்கூடிய எல்லா செயல்களுக்கும் இந்தக் கொள்கை பொருந்தும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நாம் ஏதாகிலும் கொடுக்கும்போது, மற்றக் காரியங்களிலும் நாம் குறைவுப்பட்டுவிடுவோம் என்றும், உணவு தட்டுப்பாடு ஏற்படும் என்றும் பொருளல்ல. நாம் அனைவரும் தெய்வீக பொருளாதாரத்தில் சிக்கனமான கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். "ஆண்டவருடைய சீஷர்கள் விவேகமும், பொருளியல் சார்ந்த சிக்கனமுமாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் மட்டுமீறி சிக்கனமாகவும், கஞ்சனாகவும், சொத்துக்களைக் குவிக்கக்கூடியவர்களாகவும் இருக்கக்கூடாது" R3877.

**ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவுதல்:**

அன்பு எனும் விலையேறப்பெற்ற தைலத்தை ஊற்றுவதோடுகூட நம்முடைய ஆண்டவரை பல்வேறு விதங்களில் சேவிக்கலாம் என்று மரியாளின் இந்தச் செயல் காட்டுகிறது. மரியாள் தன்னுடைய தலைமயிரைக்கொண்டு இயேசுவின் பாதங்களைத் துடைத்தாள். மறுநாளில் நம்முடைய ஆண்டவர், இந்தச் செயலுக்கான அர்த்தத்தை தம்முடைய சீஷர்களுக்குக் காண்பித்தார். "பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள் நீங்கள் சொல்லுகிறது சரியே நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவான் 13:5-15).

மரியாள் ஆண்டவருக்குச் செய்ததை அவர் தம்முடைய சீஷர்களுக்குச் செய்தார். இந்தச் செயலை முன்மாதிரியாகப் பின்பற்றுவதற்கு இது தகுதியுள்ளது என்பதை இயேசு காட்டுவதற்கே இதைச் செய்தார். "அவர்களின் ஆண்டவரும், அவர்களின் தலையும் அவர்களின் எஜமானனுமானவர், இவர்கள் அனைவருக்கும் ஊழியஞ்செய்யும்படிக்கு தம்மைத் தாழ்த்தினார். இப்படியாக அவர் சீஷர்களின் பெருமையை கண்டித்து, அதே நேரத்தில் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியங்களிலும் இதைப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏற்ற மாதிரியாக முன் வைத்தார். எந்த உயர்வான காரியமானாலும் சரி, அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் பொதுவான காரியங்களானாலும் சரி ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் ஒருவரையொருவர் சேவிப்பதற்கு மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்று வல்லமையோடு எடுத்துக்காட்டினார்." ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவுதல் என்ற காரியம் வாழ்க்கையின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் எந்தவிதமான இரக்கம் விசேஷமாக ஆவிக்குரிய உதவி மற்றும் ஆறுதல்களுக்கு பயன்படுத்தக்கூடியதாக உள்ளது (The Herald of Christ's Kingdom, March/April 2006).

ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவுவதற்கு நமக்குப் பணம் தேவையில்லை; தேவைப்படுகிறது – நம்முடைய இருதயங்களில் உள்ளார்ந்த விருப்பம், அன்புள்ள ஆவி மற்றும் மற்றவர்களைச் சேவிக்கக்கூடிய ஆர்வம். இயேசுவின்

தலையில் ஊற்றப்பட்டு, அவருடைய சரீரத்தில் வழிந்தோடிய விலையேறப்பெற்ற தைலம், தேவனால் அபிஷேகிக்கப்பட்டவரும் நீண்டகாலமாக எதிர்பார்த்த மேசியா என்றும் அனைவராலும் நினைவுகூரப்பட்டது. "மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம்" (யோவான் 1:41). இந்தச் செயல், பேதுருவின் வார்த்தைகளிலும் இதே கருத்தை வெளிப்படுத்தியது. "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" (மத்தேயு 16:16).

**இரண்டு ஒலிவ மரங்கள்:**

சகரியா 4-ஆம் அதிகாரத்தில், இரண்டு ஒலிவ மரங்கள் தங்களுடைய பொன்னான எண்ணெயை பொன் குத்துவிளக்கிற்குள் ஊற்றியதுபற்றி நாம் வாசிக்கிறோம். "நீ காண்கிறது என்னவென்று கேட்டார்; அதற்கு நான்: இதோ, முழுவதும் பொன்னினால் செய்யப்பட்ட குத்துவிளக்கைக் காண்கிறேன்; அதின் உச்சியில் அதின் கிண்ணமும் அதின்மேல் அதின் ஏழு அகல்களும், அதின் உச்சியில் இருக்கிற அகல்களுக்குப்போகிற ஏழு குழாய்களும் இருக்கிறது. அதின் அருகில் கிண்ணத்திற்கு வலதுபுறமாக ஒன்றும், அதற்கு இடதுபுறமாக ஒன்றும், ஆக இரண்டு ஒலிவமரங்கள் இருக்கிறது . . . மறுபடியும் நான் அவரை நோக்கி: இரண்டு பொற்குழாய்களின் வழியாய்த் தொங்கி, பொன்னிறமான எண்ணெயைத் தங்களிலிருந்து இறங்கப்பண்ணுகிறவைகளாகிய ஒலிவமரங்களின் இரண்டு கிளைகள் என்னவென்று கேட்டேன் . . . இவைகள் இரண்டும் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் என்றார்" (சகரியா 4:2, 3, 12, 14).

ஆசரிப்புக்கூடாரத்தில், அபிஷேகத்திற்கு மட்டுமல்ல, பரிசுத்த ஸ்தலத்தில் ஒளி கொடுப்பதற்கும் எண்ணெய் பயன்படுத்தப்பட்டது. நாம் சத்தியத்தை அறிந்துகொள்வதற்கு, தேவனுடைய ஆவி நம்மை கற்பிக்கிறது. இரண்டு ஒலிவ கிளைகள் (அல்லது இரண்டு ஒலிவ குமாரர்கள் - எபிரெயரில் சொல்லர்த்தமாக). ஆசாரியனாகிய யோசுவாவையும், பிரபுவாகிய செருபாபேலையும் அடையாளப்படுத்துகிறது. இஸ்ரயேலில், இரண்டு பொறுப்புகளில் இருக்கக்கூடிய இவர்கள் அபிஷேகிக்கப்பட வேண்டும். ஆண்டவராம் இயேசுவே இந்த இரண்டு பொறுப்புகளையும் இணைத்தார். ஏனெனில் மெல்கிசெதேக்கின் முறைமையின்படி அவர் ஆசாரியரும் இராஜாவுமானவர். ஓர் இராஜா பூமிக்குரிய காரியங்களுக்கும் ஆசாரியர் ஆவிக்குரிய காரியங்களுக்கும் பொறுப்புள்ளவர்கள். பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய வாக்குத்தத்தங்கள் ஒரு தனி நபரால் எவ்வாறு நிறைவேற வேண்டுமென்பதை தேவனுடைய வார்த்தைகளில் எவ்வளவு அற்புதமாக அடையாளப்படுத்துகிறது –பழைய ஏற்பாட்டில் பூமிக்குரிய பணிக்காக அதிக முக்கியத்துவம் கொடுப்பதுபோல, புதிய ஏற்பாட்டில் பரலோகத்திற்குரிய காரியங்கள் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. குத்துவிளக்குக்கு பொன் குழாய்களின் வழியாக ஒலிவ எண்ணெய் கொடுத்த இரண்டு ஒலிவ மரங்கள், தேவனுடைய ஆவியின் தோற்றமாய் இருக்கும் தேவனுடைய வார்த்தையை அடையாளப்படுத்துகிறது.

வெளிச்சத்தைக் கொடுக்கும் குத்துவிளக்கு எதை அடையாளப்படுத்தப்படுகிறது? "Nation of the Book" என்று ஒரு தேசம் உள்ளது. இதன் வழியாக தேவன் புறஜாதிகளுக்கு ஒளியைக் கொடுத்தார். இந்தத் தேசம், தற்செயலாக, பொன் குத்துவிளக்கைத் தன்னுடைய அடையாளமாக தேர்வு செய்யவில்லை. இந்தத் தேசம் பல யுகங்களுக்கு, மீதியுள்ள உலகத்திற்கு வெளிச்சத்தின் ஊற்றாய் இருந்தது. ஆகவே இது முதல் குத்துவிளக்கில் சித்தரிக்கப்படுகிறது. ஆனால் வெளிப்படுத்தலின் புத்தகத்தில், இந்த இரண்டு குத்துவிளக்குகளின் சித்திரங்களின் தொடர்ச்சியை நாம் காணலாம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த இரண்டாவது குத்துவிளக்காய் இருக்கிறோம். நாம் இந்த உலகத்திற்கு ஒளியாக இருக்கிறோம் (மத்தேயு 5:14-17). குத்துவிளக்கு சபையை அடையாளப்படுத்துவதாக வெளிப்படுத்தல் முதலாம் அதிகாரம் காட்டுகிறது. நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்" (வெளிப்படுத்தல் 1:20). ஆகவே தேவன், இந்த இரண்டு குத்துவிளக்குகளாகிய மாம்சம் மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் வழியாகத் தம்மை வெளிப்படுத்துகிறார்.

ஓர் இஸ்ரயேலன் பலி செலுத்தும்போது, அதோடு மாவும் எண்ணெயும் திராட்சரசத்தையும் காணிக்கையாகச் செலுத்த வேண்டும். "நீங்கள் குடியிருக்கும்படி நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய்ச் சேர்ந்த பின்பு, விசேஷித்த பொருத்தனையாயாவது, உற்சாக பலியாயாவது, உங்கள் பண்டிகைகளில் செலுத்தும் பலியாயாவது, கர்த்தருக்கு மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் சர்வாங்கதகன பலியையாவது மற்ற யாதொரு பலியையாவது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனமாகப் பலியிடும்போது, தன் படைப்பைக் கர்த்தருக்குச் செலுத்துகிறவன் சர்வாங்கதகன பலிக்காகிலும் மற்றப் பலிக்காகிலும் ஒரு

ஆட்டுக்குட்டியுடனே, ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கும் காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியைச் செலுத்தக்கடவன். பானபலியாக காற்படி திராட்சரசத்தையும் படைக்க வேண்டும்" (எண்ணாகமம் 15:2-5).

எந்தப் பலியும் எண்ணெய் இல்லாமல் செலுத்தப்படலாகாது. ஆண்டவருக்கு நாம் செலுத்தக் கூடிய காணிக்கையில் எண்ணெய் கொண்டிருக்க வேண்டும் - தேவனுடைய ஆவியையே அடிப்படையான நோக்கமாகக் (ஆதாரமாகக்) கொண்டிருக்க வேண்டும். நம்முடைய காணிக்கைகளைக்குறித்த நம்முடைய ஒரே நோக்கம் தேவனை சேவிப்பதாக மட்டுமே இருக்க வேண்டும். அதைத்தவிர வேறெதுவும் இருக்கக்கூடாது. அனனியா சப்பீராள், தங்களுடையதிலிருந்து ஒரு பங்கை தேவனுக்குக்கொடுத்தார்கள் (அப்போஸ்தலர் 5). மற்றவர்கள் கொடுத்திட்ட வெகுமதிகளைக்காட்டிலும் இவர்கள் கொடுத்த வெகுமதி அதிகமான மதிப்பை உடையதாக இருந்திருக்கலாம், ஆனால் அது தேவாவியின் தூண்டுதலினால் செய்யப்படவில்லை. மற்ற நோக்கங்களுக்காக இது செய்யப்பட்டதினால் தேவனால் அது அங்கீகரிப்பைப் பெறவில்லை.


ஆண்டவருக்குப் பலி செலுத்தும்போதும் சகோதரர்களோடு ஒருமித்து வாசம் செய்யும்போதும், நாம் எண்ணெயாகிய பரிசுத்த ஆவியை அளவில்லாமல் ஊற்ற வேண்டுமென்பதை நினைவில்கொள்ள வேண்டும். பிரதான ஆசாரியர்மேல் ஊற்றப்பட்ட தைலம், பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்துகிறது. மரியாள் இயேசுவின்மேல் ஊற்றின தைலம், அவள் இயேசுவுக்காகக்கொண்டிருந்த அன்பை அடையாளப்படுத்துகிறது.

"பயணம் முடிவடைவதற்கு முன் நம்முடைய சகோதரர்களை இரக்கமுள்ள வார்த்தைகளாலும் அன்பான பரிவினாலும் கனிவான வெளிப்பாடுகளினாலும் அவர்களை அபிஷேகிக்க வேண்டுமென்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்" (R3878).

சர்வ வல்லவரின் பரிசுத்தமான புத்தகத்தை வாசிப்பதிலும், அதை தியானிப்பதினாலும் அவர் பரிசுத்த ஆவியை அனுப்பும் பொன் குழாய்களை நாம் அடிக்கடி பயன்படுத்துவோமாக. காலம் இன்னும் இருப்பதினால், அவரால் அபிஷேகிக்கப்பட்டவர்களைப்போல அவரை நாம் சேவிக்க முயற்சிப்போம் (1 யோவான் 2:27).

**ஆதாம் மற்றும் இயேசுவை வேறுபடுத்துதல்**

# தேவனுடைய தோட்டம்



Gheorghe Bivol, Moldova

"தேவனுடைய வனத்திலுள்ள கேதுருக்கள் அதை மறைக்கக்கூடாதிருந்தது; தேவதாரு விருட்சங்கள் அதின் கொப்புகளுக்குச் சமானமல்ல; அர்மோன் மரங்கள் அதின் கிளைகளுக்கு நிகரல்ல; தேவனுடைய வனத்திலுள்ள ஒரு விருட்சமும் அலங்காரத்திலே அதற்கு ஒப்பல்ல. அதின் கிளைகளின் திரளினால் அதை அலங்கரித்தேன்; தேவனுடைய வனமாகிய ஏதேனின் விருட்சங்களெல்லாம் அதின்பேரில் பொறாமைகொண்டன" (எசேக்கியேல் 31:8-9).

தேவனுடைய வனத்திலுள்ள கேதுருக்கள் அதை மறைக்கக்கூடாதிருந்தது; தேவதாரு விருட்சங்கள் அதின் கொப்புகளுக்குச் சமானமல்ல; அர்மோன் மரங்கள் அதின் கிளைகளுக்கு நிகரல்ல; தேவனுடைய வனத்திலுள்ள ஒரு விருட்சமும் அலங்காரத்திலே அதற்கு ஒப்பல்ல. அதின் கிளைகளின் திரளினால் அதை அலங்கரித்தேன்; தேவனுடைய வனமாகிய ஏதேனின் விருட்சங்களெல்லாம் அதின்பேரில் பொறாமைகொண்டன" (எசேக்கியேல் 31:8-9).

**Gheorghe Bivol, Moldova**

தேவனுடைய தோட்டம் ஒரு வானவில்லைப்போல ஆதியாகமம் புத்தகத்தில் துவங்கி, வெளிப்படுத்தலின் புத்தகத்தின் முடிவுவரைக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. துவக்கத்தில் ஆதியாகமத்தின் புத்தகத்தில், ஓர் அழகான தோட்டம் பார்வைக்கு இன்பமானதும் புசிப்புக்கு நல்லதுமான மரங்கள் ஏராளமாயிருந்தது. அதற்கு நடுவில் நன்மை தீமை அறியத்தக்க விருட்சமும் இருந்தது. முதல் தம்பதியரின் கீழ்ப்படிதலைச் சோதிக்கும்படியாக இது வைக்கப்பட்டது (ஆதியாகமம் 3:16-17). "நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டு விதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்" (வெளிப்படுத்தல் 22:2).

ஜீவனைப் பெறுவதற்கு அனைவரும் இதே மரத்தின் கீழ் இதே சூழ்நிலைக்குள் வர வேண்டும் என்ற மனுக்குலத்திற்கான தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை அறிந்துகொள்வது எவ்வளவு அற்புதமாக உள்ளது. இதைப் பெற்றுக்கொள்வதற்கு இன்னும் ஒரு தோட்டம் தேவைப்பட்டது. இந்தத் திட்டத்தின் மத்தியில் தேவனுடைய குமாரன் நம்முடைய பாரங்களையும், பாவங்களைச் சுமந்தவராக உள்ளார்ந்த மனதோடு ஜெபித்தார் (லூக்கா 22:44). இந்த இரண்டு தோட்டங்கள் - ஏதேன் மற்றும் கெத்செமனே – தேவனுடைய திட்டத்தைப் புரிந்துகொள்வதற்கான திறவுகோலாகும்.

### ஏதேன் தோட்டம்:

"தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்" (ஆதியாகமம் 2:8). ஆதியாகமத்தில், சிருஷ்டிப்பைக் குறித்த விவரம் ஏதேனுடைய நில இயலைப்பற்றி குறிப்பிடுகிறது. மேலும் அந்த ஏதேனிலிருந்து பாய்ந்த நான்கு ஆறுகள்பற்றியும், மூன்று பகுதிகளைப்பற்றியும் கூறுகிறது: பைசோன், கீகோன், இதெக்கேல் மற்றும் ஐபிராத்து என்ற நதிகள், ஆவிலா எத்தியோப்பியா அசீரியா தேசங்களைச் சுற்றி ஓடியது (ஆதியாகமம் 2:8-14). இதெக்கேல் மற்றும் ஐபிராத்துக்கு இடையிலுள்ள இந்தத் தோட்டம், இக்காலத்தில் ஈராக்கு, ஆப்பிரிக்கா மற்றும் பெர்சியன் வளைகுடா பகுதியிலுள்ள வட மெசோபொத்தாமியா உள்ளதாகச் சொல்லப்படுகிறது. இந்த நான்கு ஆறுகளும் மனுக்குலத்தின் இறுதியான நான்கு இலக்குகளை அடையாளப்படுத்துகிறது. தெய்வீக சுபாவம், திரள் கூட்டத்தாரின் ஆவிக்குரிய சுபாவம் மனித சுபாவம் அல்லது இரண்டாம் மரணம்.

மூல எபிரெய பதத்திலிருந்து, "மகிழ்ச்சி" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை, ஏதேன் என்ற வார்த்தையிலிருந்து வந்தது. இதற்கு வயல் அல்லது பாலைவனம் என்று பொருள். அந்தத் தோட்டம் "ஏதேனுக்கு கிழக்கில்" இருந்ததாக 8-ஆம் வசனம் கூறுகிறது. ஆகவே ஏதேன் என்பது அதனுடைய பெயருக்குத் தகுந்தபடி இல்லாமல், ஒரு மிகப்பெரிய பரப்பளவைக் கொண்டிருப்பதைக் குறிக்கலாம். ஆதியாகமத்தில் ஏதேனின் பௌதிகநிலை கொடுக்கவில்லை. ஆனால், "தேவனுடைய தோட்டம்" என்று விவரிக்கப்படுகிறது. இது நான்கு

ஆறுகளின் ஊற்றாகவும் விவரிக்கப்படுகிறது. பூமியின் நான்கு திசைகளாகிய வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு என்று பூமி பகுக்கப்பட துவங்கியிருக்க வேண்டும் என்றும் விவரிக்கப்படுகிறது. ஆதாம் மிகுந்த மகிழ்ச்சியுள்ள தேசத்தில் சிருஷ்டிக்கப்பட்டு தோட்டத்தின் கிழக்கில் குடியமர்த்தப்பட்டார்.

தேவனுடைய பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்டவரும் அவருடைய பார்வையில் "நல்லதாக" காணப்பட்டவருமாகிய ஒரு மனுஷனை அங்கு வைத்தார் (ஆதியாகமம் 1:31). ஆயினும், ஆதாமை சிருஷ்டிக்கப்பட்டப்பின், "மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல" என்று தேவன் கூறினார். ஆதாமை மிருகங்களோடு தனியே விட்டுவிடுவதற்குப்பதிலாக, அவருடைய சொந்த மாம்சத்திலிருந்து, அவருக்கொரு துணையை சிருஷ்டித்தார். அந்த ஸ்திரீயை ஓர் உதவியாளராகத் தேவன் வடிவமைத்தார் (ஆதியாகமம் 2:22-25).

ஆதாமுக்குத் தேவன் ஓர் ஏற்றத் துணையைக் கொடுத்தது மட்டுமல்ல, அவரும் ஒரு நல்ல நண்பராக இருந்தார். பகலின் குளிர்ச்சியான வேளையில் தேவன் ஆதாமையும், ஏவாளையும் சந்திக்க வந்தார் (ஆதியாகமம் 3:8). இந்தப் பரதீசில் அல்லது தோட்டத்தில்தான், தேவன் அவருடைய மனித குடும்பத்தோடு ஒரு நெருங்கிய ஐக்கியத்தை ஏற்படுத்தினார். அவரைப்பற்றி புரிந்து கொள்வதற்கும், அறிந்துகொள்வதற்கும், அவர்களோடு நேரத்தைச் செலவழித்தார். ஆயினும் யேகோவா தேவன் மனிதனோடு தொடர்பு வைத்திருந்த அந்தத் தோட்டத்திற்குள் பாவம் நுழைந்தது ஐயோ பரிதாபம்!

"நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள்" (ஆதியாகமம் 3:5) என்று வாக்குறுதி அளித்த சாத்தான், புசிக்க வேண்டாமென்று விலக்கப்பட்டிருந்த விருட்சத்தின் கனியைப் புசிக்கும்படி தந்திரமான சர்ப்பத்தின் வழியாக ஏவாளை வஞ்சித்தது. தேவனுடைய வழிநடத்துதலை ஒரு பொருட்டாக எண்ணாமல், ஏவாள் அந்தக் கனியைப் புசித்ததோடு ஆதாமுக்கும் புசிக்கக் கொடுத்தாள் (ஆதியாகமம் 3:6).

இந்தக் கட்டத்தில் தேவனோடு அவர்கள் கொண்டிருந்த உறவு துண்டிக்கப்பட்டது. அவர்கள் பயந்திருந்ததினால், தங்களுடைய நிர்வாணத்தை மறைத்துக்கொண்டார்கள் (ஆதியாகமம் 3:8). பகலில் குளிர்ச்சியான வேளையில் அவர்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்டபோது, தோட்டத்திலுள்ள மரங்களுக்குள் மறைந்துகொண்டார்கள். இதன்விளைவாகக் கீழ்ப்படியாத அந்த தம்பதியை சபித்து ஒரு தரிசு பூமிக்குப் போகும்படிக்கு, தோட்டத்தைவிட்டு வெளியேற்றிவிட்டார் (ஆதியாகமம் 3:14-24). அவருடைய பிரசன்னத்தை விலக்கிக்கொண்டு, அவர்களின் கீழ்ப்படியாமையின் விளைவாகிய உபத்திரவத்தை அனுமதித்தார். இந்தத் தோட்டத்திற்குள் பாவம் நுழைந்து, இந்நாள்வரைக்கும் வழிவழியாக அனைவருக்குள்ளும் தொடர்ந்து பரவிக்கொண்டே இருக்கிறது. ஆனால் தேவன் அவர்களை முற்றிலுமாக ஒதுக்கிவிடவில்லை. "தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்" (ஆதியாகமம் 3:21). மிகுந்த கிருபையினாலே, ஆதாம் மற்றும் ஏவாள் மீண்டும் தொடர்பு கொள்வதற்கு ஒரு பலியைக் கொடுத்தார்.

**கெத்செமனே தோட்டம்:**

கெத்செமனே, "எண்ணை பிழியக்கூடிய இடத்தை" (எண்ணெய் செக்கு) அடையாளப்படுத்துகிறது. ஒருவேளை அந்த தோட்டத்தில் ஒலிவ மரங்கள் இருப்பதினாலும், அங்கு ஒலிவ எண்ணெய் பிழியப்படுவதினாலும் பிழிந்தெடுக்கப்பட்ட எண்ணெய் ஒளி கொடுப்பதற்கும் உணவு சமைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. இதை ஒரு தோட்டம் என்று யோவான் குறிப்பிடுகிறார் (யோவான் 18:1). பண்டைய காலத்தில், தோட்டம் என்ற வார்த்தை நெருக்கமாக பழத்தோட்டங்களைக் குறிப்பிட்டது. ஒரு பொதுவான தோட்டமோ, காட்டு மரங்களைக்கொண்ட காடுகளையோ அல்ல, அது ஒலிவ மரங்களைக்கொண்ட தோட்டமாக இருந்தது (R2773). கெத்செமனே தோட்டம் மாற்குவின் தாயின் வீடாக இருந்தது என்றும், அவள் இயேசுவின் சிநேகிதியும், ஐசுவரியமுள்ள ஒரு விதவையாகவும் இருந்தாள் என்று குறிப்பிடப்படுகிறது (R3885). இந்த கெத்செமனே ஒரு தோட்டமாக இருந்ததாலும், இயேசுவின் இறுதி சோதனைகள் துவங்குகிற இடமும், அவர் "பிந்திய ஆதாம்" என்ற தலைப்பைப் பெறக்கூடிய இடமாக இருந்ததினாலும், இது மிகப் பொருத்தமாக இருக்கிறது (1 கொரிந்தியர் 15:45).

கிபி 33, நீசான் 14-ஆம் தேதி அன்று நாம் எருசலேமில் இருந்திருந்தால், கெதரோன் பள்ளத்தாக்கின்மேல் ஒரு முழு நிலவு கண்டிருப்போம். பெரும்பாலும் குளிர்காலத்தில் சிறிய நீரோடையோடு கெதரோன் சம்பந்தப்பட்டிருக்கிறது. கடைசி இராபோஜனம் முடிந்தவுடன் நினைவு கூருதலைத் தொடர்ந்து, இயேசுவும் அவருடைய சீஷர்களும், கெதரோனைக் கடந்து ஒலிவ மலைக்குச் சென்று அங்கு கெத்செமனே என்ற தோட்டத்திற்குள் பிரவேசித்தார்.

பள்ளத்தாக்கின் இருபக்கங்களிலும் மரங்களின் மத்தியில் கல்லறைகளால் நிறைந்து காணப்படுகிறது. இந்தக் காட்சியைக் கண்ட நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் சிந்தைக்குள் என்ன காரியம் ஊக்குவிக்கப்பட்டிருக்கும் என்று நாம் சற்று கற்பனை செய்துப்பார்க்கலாம். வெகு சீக்கிரத்தில் தேவதூஷணம் சொன்னவர் என்று குற்றம் சாட்டப்பட்டு, கல்வாரி சிலுவையில் அறையப்பட போகிறார் என்பதை அவர் நன்கு அறிந்திருக்க வேண்டும். சரியாக அந்தச் சிலுவையின்மேல் ஆதாமின் இடத்தைப் பெற்றுக்கொள்வார். அங்கு அவர் உலகத்தின் பாவத்தைச் சுமப்பார். அந்த தண்டனை கொடூரமாக இருப்பினும் ஆதாமையும் அவர் சந்ததியையும் இரட்சிப்பதற்கு இது மிக அவசியம் என்று அவர் அறிந்திருந்தார். ஆயினும் மனித வாழ்க்கையின் வேதனைகளைத் தாண்டி இயேசு "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்" (ஏசாயா 53:11).

அவருடைய விசுவாசமும் பலியின் பலனுமாக மரித்த அனைவரும் அந்த கல்லறைகளில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல், எல்லா கல்லறைகளிலிருந்தும் உயிர்த்தெழுவார்கள் என்பதை இயேசு அறிந்து, அவருடைய உள்ளம் மகிழ்ந்திருக்கும். "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம்வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28, 29). அவர்கள் கெதரோன் ஆற்றைக் கடந்து, அந்தப் பள்ளதாக்கின் வழியாக கெத்செமனே தோட்டத்திற்கு வந்தார்கள். அவர்கள் அந்தத் தோட்டத்திற்குப் பலமுறை வந்திருக்கிறார்கள்.

**நட்புக்கும் தோழமைக்கும் ஓர் இடம்:**

திரளான ஜனக்கூட்டங்களுக்கு அப்பால் இங்குதான் சீஷர்கள் இயேசுவை மிக நெருக்கமாக அறிந்துகொள்ளக்கூடிய இடமாக இருந்திருக்கும் என்று நாம் கற்பனை செய்யலாம். ஒருவேளை அவர்கள் ஒருமித்துப் போஜனம் புசித்திருப்பார்கள் அல்லது ஆழமான ஆன்மீக சம்பாஷணைகள் நடந்திருக்கும். அல்லது ஒருவேளை அவர்கள் அமர்ந்து, தோட்டத்தின் அமைதியையும் நிசப்தத்தையும் மகிழ்ந்திருக்க வேண்டும். ஆயினும் இந்த இரவு வித்தியாசமாக இருந்திருக்கும். தம்மோடு விழித்திருந்து ஜெபிக்கும்படி இயேசு தம்முடைய சீஷர்களிடம் கூறினார். அங்கு, அந்த ஒலிவ மரங்களுக்குள், நம்முடைய ஆண்டவரின் உச்சக்கட்டமான, மனமார்ந்த ஜெபம் கேட்கப்பட்டது, தம்முடைய தந்தையை நோக்கி கெஞ்சும் ஒரு மகனுடைய இருதயம் நொறுங்கிய மன்றாட்டு: "அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார்" (மாற்கு 14:36).

திடீரென்று ஒரு கூட்டம் குறுக்கிட்டது. முத்தம் கொடுத்து யூதாஸ் தன்னுடைய ஆண்டவரைக் காட்டிக்கொடுத்தான். குழப்பமடைந்த சீஷர்கள் பயந்து சிதறினார்கள். "இந்த யுகத்தின் முடிவில், சபைக்கு இந்த கெத்செமனே அனுபவம் வரும்" (R5550) என்று ரசல் கருதுகிறார். வரக்கூடிய சோதனைகளைப்பற்றி பேதுருவையும் மற்ற சீஷர்களையும் இயேசு எச்சரித்ததுபோல (லூக்கா 22:31-32), இக்காலத்து சோதனைகளுக்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். கடுமையான பரீட்சைகளுக்கும் சோதனைகளுக்கும் அநேகர் ஆயத்தமாகவில்லை.

"அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும் நிந்தைகளிலும், நெருக்கங்களிலும் துன்பங்களிலும் இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்" (2 கொரிந்தியர் 12:10) என்று பவுல் எழுதினார். இதைப் பார்க்கும்போது, அவருடைய விசுவாசம் உறுதியாக

இருந்தபோதே, அவருடைய சொந்த போதாமையை உணர்ந்ததையே பொருள்படுத்தினார் என்று நிச்சயிக்கலாம். இப்படிப்பட்ட காலங்களில் ஆண்டவருடைய வழிநடத்துதலுக்காக பவுல் விழித்திருந்து ஜெபம் பண்ணினார். நாமும் இதையே செய்ய வேண்டும்.

வெற்றிகரமாக இந்தத் தோட்டத்தில்தான் இயேசு மரணத்தின்மேல் அவருடைய வல்லமையை வெளிப்படுத்தினார். அவர் ஒரு தோட்டத்திலுள்ள கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார் (யோவான் 19:41). அங்கு இரண்டு இரவுகள் கிடத்தப்பட்டிருந்தார். மூன்றாம் நாளில் அவர் எழுந்தார். பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்தார். இது பரதீசுக்கான வழியைத் திறந்தது. பரதீசு என்ற வார்த்தை "தோட்டம்" என்று பொருள்படும், கிரேக்க வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டதாகும் (Strong's 3857). அங்குள்ள ஜீவவிருட்சம், அழியாமையை அடையாளப்படுத்துகிறது. அவ்விடத்திலிருந்து கிறிஸ்துவும் அவருடைய சபையும் உலகத்தை ஆசீர்வதிப்பார்கள். அங்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிப்பவர்களோடு தேவன்தாமே வாசம் செய்வார் (வெளிப்படுத்தல் 2:7). அடையாளமாக ஜீவவிருட்சம் கிறிஸ்துவின் சிலுவையே.

### இரண்டு தோட்டங்களின் வேறுபாடுகள்

ஏதேன் தோட்டத்தில் - மனித இனத்தின் நாடகம் அரங்கேறியதுபோல, இறுதி காட்சி கெத்செமனே தோட்டத்தில் நடைபெற வேண்டியதாக இருந்தது. ஆயினும் ஏதேன் தோட்டம் மற்றும் கெத்செமனே தோட்டத்திற்குமுள்ள வேறுபாடுகள் மிகவும் முக்கியமானதாக உள்ளது.

❖ ஏதேன், அழகானதும் பிரகாசமுமாக இருந்தது. கெத்செமனே தோட்டம் இருளும் போர்களமாகவும் இருந்தது.

❖ ஏதேனில் ஆதாமும் ஏவாளும், சாத்தானின் சித்தத்தைப் பின்தொடர்ந்தார்கள். கெத்செமனேயில் இயேசு தேவனுடைய சித்தத்தைப் பின் தொடர்ந்தார்.

❖ ஏதேனில் ஆதாம் கீழ்ப்படியாமல் போனார். கெத்செமனேயில் இயேசு கீழ்ப்படிந்திருந்தார்.

❖ ஏதேனில் ஆதாம் தன்னுடைய மனைவியின் கையிலிருந்து தடை செய்யப்பட்டக் கனியை வாங்கினான். கெத்செமனேயில் இயேசு, பாத்திரத்தை பிதாவின் கையிலிருந்து வாங்கினார்.

❖ ஏதேனில் ஆதாம் தோட்டத்திலுள்ள மரங்களுக்குள் ஒளிந்து கொண்டார். கெத்செமனேயில் இயேசு, திறந்த முகமாக தன்னுடைய மரணத்தை எதிர்நோக்கினார்.

❖ ஏதேனில் மனுஷனைப் புறம்பே தள்ள பட்டயம் உருவப்பட்டது. கெத்செமனேயில் மனுஷன் மீண்டும் பரதீசுக்குள் நுழைய பட்டயம் அகற்றப்பட்டது.

### நமக்குள்ள பாடம்

நம்முடைய வாழ்க்கையில் எழும்பும் சோதனைகளைக்குறித்து எச்சரிப்பாக இருப்போம். ஆதாமின் பாவத்தைப் பின்பற்றுவதைவிட்டு, இயேசுவின் மாதிரியைப் பின்பற்றுவோம். உன்னதத்திலிருந்துவரும் வழிநடத்துதலுக்கு விழித்திருந்து, தாழ்மையோடு முழங்கால்படியிட்டு, ஆண்டவருடைய சித்தத்திற்கு அமைதலாகக் காத்திருந்து, தெய்வீக சித்தத்திற்குள் நாம் முழுமையாக மூழ்கலாம். ஒவ்வொரு சோதனையிலும், "நம் விசுவாசத்தைத் துவங்கினவரும், முடித்தவரும்" (எபிரெயர் 12:2) என்பதை கருத்தில் கொள்ளுவோம். பேதுருவின் ஆலோசனையைப் பின்பற்றுவோம். "அவர் உங்களை விசாரிக்கிற வரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்" (1 பேதுரு 5:7). கெத்செமனேயின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி "கனம் மகிமை அழியாமையை" (ரோமர் 2:7) தேடுவோம். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலிப்பியர் 2:5).

நம்முடைய நேரம், பணம் மற்றும் தாலந்துகளைப் பயன்படுத்துவதை, இந்த அர்ப்பணிப்பு பாதிக்கும். இன்னும் இதன் விளைவாக நெருங்கிய உறவுகளைக்கூட இழக்க நேரிடும். ஆனால் இந்த தியானத்திற்காக (படிப்பு) தேவையான நேரம், சக்தியைக்கொடுத்தாலும், அது முடிவாகாது என்பதைச் சிந்தித்துக்கொள்ளுங்கள். சுயத்தைப் பலி செலுத்துவதில் உங்களுடைய உண்மை முழுமையாக சோதிக்கப்படும். அதற்குப்பின் நீங்கள் சிறுமந்தை வகுப்பாருக்கு தகுதியுள்ளவர்களா அல்லது தகுதியற்றவர்களா என்பதை நிரூபிக்க வேண்டும். முற்றிலுமாக ஜெயங்கொள்ளும் சபையே இராஜ்யத்தில் கனத்தைப் பெறும் (யுகங்களைப் பற்றிய தெய்வீக ஏற்பாடு, ஆங்கிலத்தில் பக்கம் 347). "பின்பு இயேசு ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து: ஒருவன் என்

பின்னே வரவிரும்பினால், அவன் தன்னைத்தானே வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" (மாற்கு 8:34) என்று இயேசு கூறினார்.


"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோத்தேயு 3:12) என்று பவுல் கூறினார். தேவன் ஒரு நோக்கத்திற்காக இந்த அனுபவங்களை அனுமதிக்கிறார். கிறிஸ்துவின் ஆட்சியின்போது, மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதற்கு பயன்படுத்தும்படிக்கு, வருங்கால இராஜரீகமான ஆசாரியத்துவத்தின் ஒரு அங்கமாக மாறுவதற்குத் தேவன் பக்தியுள்ள ஒரு வகுப்பாரை அழைக்கிறார். தேவன் மேலும், அவருடைய சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளின்மேலுள்ள விசுவாசத்தையும், பற்றுறுதியையும், சோதிப்பதற்கு இக்காலத்து அனுபவங்கள் பொருள்படுகிறது. கிறிஸ்துவின் நாமத்திற்காகவும், தேவனுக்காகவும் அவருடைய கொள்கைகளுக்கு உபத்திரவப்படுவதற்கு நீங்கள் எந்தளவுக்கு மனப்பூர்வமாக விரும்புகிறீர்கள்? சிலர் அதிகமாக உபத்திரவப்படுவார்கள். சிலர் குறைவாக உபத்திரவப்படுவார்கள். தேவன் அவரவரின் திராணிக்குத்தக்கதாக அனுபவங்களை அனுமதிக்கிறார்.

இறுதியான கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள் கடந்துச் செல்லும் சோதனைகளும் அனுபவங்களும் அக்கினி போலிருக்கலாம். "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" (1 பேதுரு 4:12). கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர் ஒவ்வொருவரும் சோதிக்கபட வேண்டுமென்பதை அறிந்த நாம், இந்த அக்கினிபோன்ற சோதனைகளால் தொடப்படும்போது மகிழலாம். அப்போது நாம், "உபத்திரவத்தின் பாத்திரத்தில் எனக்கொரு பங்குண்டு. தேவனுடைய அருளினால், இந்தச் சோதனைகளை நாம் ஜெயங்கொண்டால், கிறிஸ்துவின் சரீர அங்கத்தினராக என்னுடைய நம்பிக்கையை உணர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைவேன்" என்று கூறலாம்.

தேவன் தம்முடைய ஜனங்களைப் பராமரிப்பதில் மகிழ்ச்சியடைகிறார் என்று ஏசாயா 5:2 வெளிப்படுத்துகிறது. "அவர் அதை வேலியடைத்து, அதிலுள்ள கற்களைப் பொறுக்கி, அதிலே நற்குல திராட்சச்செடிகளை நட்டு, அதின் நடுவில் ஒரு கோபுரத்தைக்கட்டி." தேவன் ஜனங்களின் பலனுள்ள தோட்டக்காரர், இதற்குத் தோண்டுவது, சுத்திகரிப்பது மற்றும் இருதயங்களில் ஒரு புதிய வாழ்க்கைகளை நடுவது என்றும் பொருள்படலாம். விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவோம். நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை தேவனுடைய சித்தத்தின்படி வாழுவோம். "நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம், ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்" (ரோமர் 14:8).

**மனுக்குலத்தின்மேலுள்ள சாபம் நீக்கப்படுதல்**

# முள்ளுள்ள கிரீடத்தை நான் காணும்போது



**Jozef Siedleczka, Australia**

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்" (ஏசாயா 53:4).

முள்ளுகளின் கிரீடத்தைப் பற்றி சிந்திக்கும் போது, நாம் என்ன உணருகிறோம்? தீர்க்கதரிசியாகிய ஏசாயாவைப்போல யோசிக்கி றோமா? "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங் களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்" (ஏசாயா 53:5-7).

இயேசு எப்போதும் தேவனுடைய சித்தத்தையே செய்தார் (சங்கீதம் 40:8, 9). அவர் பலியாக வேண்டும் அவருடைய தந்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும், அவருடைய மனமகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதே இயேசுவின் இலட்சியமாக இருந்தது. எல்லா கற்பனைகளையும், நியாயப் பிரமாணம் உள்பட, அவரை தேவன் கேட்டுக்கொண்ட அனைத்தையும் நிறைவேற்றினார். நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றியதால் அவர் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டார். மரணத்தீர்ப்பின் கீழுள்ள மனுக்குலம் அனைவரையும் மீட்பளிக்கும் பலியைச் செலுத்துவதற்கு அவர் ஆயத்தமாக இருந்தார். இயேசுவின் வாழ்க்கையில் பரலோக பிதா அவரோடிருந்தார் என்றும், அவரைப் பராமரித்தார் என்றும் அவரைப் பலப்படுத்தினார் என்றும் தெளிவாகக் காணப்படுகிறது. இப்படியிருக்க, இயேசுவுக்கு அவர் அதிகமாக தேவைப்படும் நேரத்தில், பிதா அவரை கைவிட்டது போல தோன்றுவது ஏன்? அவர் மேல் வந்த கடினமான போதனைகளை அவர் ஏன் நீடிய பொறுமையோடு சகிக்க வேண்டியதாக இருந்தது?

**மனுஷன் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான்**

ஆதியாகமம் 1:27-இல் வாசிக்கிறபடி ஆதாமும் ஏவாளும் குறையற்றவர்களாக இருந்தார்கள். "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச்சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." தேவன் அவர்களுக்கு ஜீவனைத்தந்து ஏதேனில் வைத்தார். ஆயினும் ஆதாமின் கீழ்ப்படிதலையும் நம்பிக்கையையும், நிரூபிக்கப்பட வேண்டும் என்பது அவருடைய திட்டமாக இருந்தது. மரணம் அல்லது ஜீவனைத் தேர்வு செய்யும்படி தேவன் அவருக்கு உரிமையைக் கொடுத்தார். அந்தத் தெரிந்தெடுத்தலின் பலனாக, தேவனுடைய தீர்ப்பு அவர்கள் மேல் வந்தது. தேவனோடு இவர்கள் கொண்டிருந்த உறவு துண்டிக்கப்பட்டது. கலப்பற்ற அவருடைய ஆசீர்வாதங்களை அவர் எடுத்துவிட்டார். பூமி அவர்கள் நிமித்தம் சபிக்கப்பட்டது. ஆதாமின் கீழ்ப்படியாமையின் அந்நேரம் முதல் மனுக்குலம் கடினமாக உழைக்க வேண்டியதாக இருந்தது. பூமி முள்ளும் குருக்கும் முளைப்பித்தது. "அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்" (ஆதியாகமம் 3:17, 18).

நம்முடைய முதல் பெற்றோரிடமிருந்து வந்த இந்த ஒரு பாரம்பரிய சொத்தினிமித்தம், முழு மனுக்குலமும் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டு, மரணத்திற்குக் கையளிக்கப்பட்டார்கள். "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (சங்கீதம் 51:5). இந்த ஒரு கடுமையான தீர்ப்பு - மரண சாபம் அந்நாள் முதல் இந்நாள் வரைக்கும் - வியாதி, வேதனை மற்றும் உபத்திரவம் என்ற பலனை அறுவடை செய்து வருகிறது. ஆறாயிரம் வருடங்களாக தேவனுடைய கோபாக்கினை, இந்த உலகத்தின்மேல் பிரவாகித்துக்கொண்டிருக்கிறது. "நீதிமான் ஒருவனும் இல்லை ஒருவனாகிலும் இல்லை" என்று எழுதியிருப்பதுபோல (ரோமர் 3:10). இது ஒவ்வொரு நபரையும் பாதித்துள்ளது.

தேவன் இரக்கமுள்ளவராக இருப்பதினாலே, ஆதாமுக்கும் அவருடைய சந்ததிக்கும், அவர் ஓர் இரட்சிப்பின் திட்டத்தை ஏற்படுத்தினார். இந்தத் திட்டத்தில் ஆபிரகாமின் சந்ததிக்கு ஒரு விசேஷித்த வாக்குத்தத்தம் உள்ளடக்கப்பட்டது (ஆதியாகமம் 22:18). இந்தத் திட்டத்திற்கு இயேசுவே அஸ்திபாரமானார். அவரே முதல் பிறந்தவரும், இந்தச் சந்ததிக்குத் தலையுமானார் (கொலோசெயர் 1:18). தேவனுடைய குறித்த காலம் வந்தபோது, லோகோஸ் பரலோக அதிகாரத்தின் எல்லையை விட்டிறங்கி பரிபூரண மனுஷனுடைய கனத்தையும், மகிமையையும் பெற்றுக்கொண்டார். தேவன் ஆதாமுக்குக் கொடுத்ததுபோல, இயேசுவுக்கும் ஜீவனைக் கொடுத்தார். இது ஆதாமை இரட்சிப்பதற்கு, ஒரு சரிநிகர் சமான விலையைக் கொடுப்பதற்கு இயேசுவை ஆற்றலுடையதாக்கியது.

பாவம் செய்த ஆதாமுக்கு ஒரு சரிநிகர் சமான விலை தெய்வீக நீதி கோரியது. ஆதாம் தேவனுக்கு எதிராக செயல்பட்டதினால் குற்றவாளியானார். இதன்விளைவாக ஆதியாகமம் 3:15-ஆம் வசனத்தில் சொல்லப்பட்ட சில ஆசீர்வாதங்களைத் தவிர மற்ற எல்லா தெய்வீக இரக்கத்திலிருந்தும் நீக்கப்பட்டார். அவர் ஏதேனிலிருந்து விரட்டப்பட்டு, அவரோடுகொண்டிருந்த நெருங்கிய தொடர்பை துண்டித்தார். ஆதாமுக்குள் தொலைந்த அனைத்தையும் மறுபடியும் பெற்றுக்கொள்ளும்படியாக இயேசு ஆதாமின் இடத்தை எடுத்துக்கொண்டார். இயேசுவின் பலியின் மரணம் இந்த உலகத்தை இரட்சிப்பதோடு மட்டுமல்ல, உயிர்த்தெழுந்த இயேசுவுக்கு தெய்வீக சுபாவத்தை வெகுமதியாகத் தந்தது.

இயேசுவின் முதல் வருகையில் இரண்டு காரியங்கள் நிறைவேற்றப்பட்டது: (1) ஆதாமுக்கு ஈடுகிரயம் கொடுக்கப்பட்டது. "எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது" (1 தீமோத்தேயு 2:6) என்று பவுல் கூறுகிறார். இங்கு நம்முடைய ஆண்டவர், மரணத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆதாமின் சந்ததியின் இழப்பை மீட்பதற்கான, நன்மைதரும் வேலைகளைச் செய்தார். யோர்தானிலிருந்து கல்வாரி வரைக்குமுள்ள மூன்றரை வருடங்கள், மரணபரியந்தமுள்ள பலியின் உடன்படிக்கையில் எல்லா நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டது. அவருடைய தனிப்பட்ட கீழ்ப்படிதலினாலும், பலியினாலும், இயேசுதாமே ஆபிரகாமின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியாகவும், ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்திற்கு சுதந்திரவாளியானார்.

இப்படியாக இயேசு சிலுவையில் மரித்ததோடுகூட, அவர் கடுமையான அவமானத்தையும், இகழ்ச்சியையும் பொறுமையோடு சகித்தார். இறுதியாக முள்ளுகளினால் பின்னப்பட்ட ஒரு கிரீடமும் அவர் தலையில் வைக்கப்பட்டது (மத்தேயு 27:29, 30).

**முள்ளுகள் பாவத்தினால் உருவானது**

நம்முடைய ஆதி பெற்றோரின்மேல் சாத்தான்கொண்டிருந்த தாக்கத்தின் வழியாக வந்த சாபத்தின் ஒரு பகுதியாக இந்த முள்ளுகள் காணப்படுகிறது. "அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்" (ஆதியாகமம் 3:17-19).

முள்ளுகள் தோன்றினது முதல், அவைகள் எப்போதும் பாவத்தோடும் மனுக்குலத்தின்மேல் வந்த சாபத்தோடும் தொடர்புடையதாக இருக்கிறது. இப்படியாக முள்ளுகள் சாத்தானின் தாக்கத்தோடு ஐக்கியமானது. மனித வாழ்க்கையில் சாத்தான் நுழைந்து தேவனுடைய அனுக்கிரகத்தைக் குழப்பின அந்த நேரம் முதற்கொண்டு முள்ளுகள் காணப்பட்டது. "ஜாதிகளே, கேட்கிறதற்குக் கிட்டிவாருங்கள்; ஜனங்களே, கவனியுங்கள்; பூமியும் அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதில் உற்பத்தியான யாவும் கேட்கக்கடவது. அதின் அரமனைகளில் முட்செடிகளும், அதின் கோட்டைகளில் காஞ்சொறிகளும் முட்பூண்டுகளும் முளைக்கும்; அது வலுசர்ப்பங்களின் தாபரமும், கோட்டான்களின் மாளிகையுமாயிருக்கும்" (ஏசாயா 34:1, 13). ஏசாயாவின் இந்த வார்த்தைகள் ஏதோம் அல்லது கிறிஸ்தவமண்டலத்திற்கு அவர்களின் கீழ்ப்படியாமையினாலேயே கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களின்மேல் தேவன் உபத்திரவத்தைக் கொண்டுவருவார்.

அதுபோல இஸ்ரயேல் தேசமும் கீழ்ப்படியாமையின் பலனாக இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை அனுபவித்தது. "அந்நாளிலே, ஆயிரம் வெள்ளிக்காசு பெறும் ஆயிரம் திராட்சச்செடியிருந்த நிலமெல்லாம் முட்செடியும் நெரிஞ்சிலுமாகும். தேசமெங்கும் முட்செடியும் நெரிஞ்சிலும் உண்டாயிருப்பதினால், அம்புகளையும் வில்லையும் பிடித்து அங்கே போக வேண்டியதாயிருக்கும். மண்வெட்டியால் கொத்தப்படுகிற மலைகள் உண்டே;

முட்செடிகளுக்கும் நெரிஞ்சில்களுக்கும் பயப்படுவதினால் அவைகளில் ஒன்றிற்கும் போகக்கூடாமையினால், அவைகள் மாடுகளை ஓட்டிவிடுவதற்கும், ஆடுகள் மிதிப்பதற்குமான இடமாயிருக்கும் என்றான்" (ஏசாயா 7:23-25).

இது ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களுக்கும் உண்மையானது. மனுஷன் தேவனைப் புறக்கணித்தால், முள்ளுகளும் - ஆர்வமற்ற மற்றும் கேடான காரியங்கள் - சாத்தானின் தாக்கத்தின் விளைவுகள் அவருடைய இருதயத்திற்குள் நுழையும். விதைக்கிறவனைப்பற்றிய உவமையில் (மத்தேயு 13:3-9), முள்ளுகளுள்ள இடங்களில் தூவப்பட்ட விதைகள் வளர்ந்தபோது, அந்தச் செடிகளை முள்ளுகள் நெருக்கிப்போட்டதென்று இயேசு கூறினார். இந்த முள்ளுகள் மனுஷனை ஆட்கொள்ளும், சாத்தானால் தூண்டப்பட்ட உலகத்தின் கவலைகள் மற்றும் ஐசுவரியத்தின் மயக்கம் என்று இயேசு அடையாளப்படுத்துகிறார் (மத்தேயு 13:22).

தவறான உபதேசங்களையும் முள்ளுகளுக்கு ஒப்பிட்டு இயேசு கூறியிருக்கிறார். "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?" (மத்தேயு 7:15, 16). இந்த வசனத்தைக்குறித்து, பாஸ்டர் ரசல் அவர்களின் விமர்சனத்தைக் காணும்போது, "சிலர் . . . முள்ளுள்ள புதர்களைப்போல, . . . தங்களிடம் நெருங்கி வருபவர்களைத் தொடர்ந்து முட்டுக்கட்டையிட்டு, எரிச்சல் உண்டுபண்ணிக்கொண்டு இருப்பார்கள் . . ." (R3747). அப்போஸ்தலனாகிய பவுல் சாத்தானை முள்ளோடு தொடர்புபடுத்தி பேசுகிறார். "அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது" (2 கொரிந்தியர் 12:7).

தன்னுடைய மாம்சத்திலுள்ள முள்ளை நீக்கும்படிக்கு பவுல் ஆண்டவரிடம் மூன்று முறை விண்ணப்பித்தார். ஆனால் "என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொரிந்தியர் 12:9) என்று அவருடைய வேண்டுதல்களுக்குத் தேவன் பதிலளித்தார். அந்த முள் அங்கேயே இருந்தது, ஆனால் பவுல் அதை மேற்கொண்டார் (வசனம் 10). நாமும் அதுபோல, மாம்சத்திலுள்ள முள்ளுகளினால் சோர்ந்துபோகிறோம். இந்த முட்கள் யாது? நாம் ஒவ்வொரு நாளும் வாழ்க்கையில் போராட வேண்டிய பெலவீனங்களும் குறைபாடுகளுமாம். பவுலும் இயேசுவைப்போலும் நாம் வாழ வேண்டும். நம்முடைய மனித விருப்பங்களை நித்தமும் விட்டொழிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் (லூக்கா 9:23). யோர்தானிலிருந்து கல்வாரிவரை பயணித்தபோது, நம்முடைய ஆண்டவர் மாம்சத்தைப் பலி செலுத்தியதுபோல நாமும் பலி செலுத்த வேண்டும். எப்படியாயினும் நம்முடைய தெய்வீக நீதியை திருப்திப்படுத்துவதற்காகப் பலி செலுத்தினதுபோல நம்முடைய பலிகள் செலுத்தப்பட வேண்டியதில்லை. அவருடைய குணத்தில் எதுவும் குறையவில்லை. அவருடைய மரணத்தினால் தெய்வீக நீதி திருப்தியாக்கப்பட்டது. "இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து" (எபிரெயர் 10:12) என்று அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவுப்படுத்துகிறார்.

### நம்முடைய பாடுகளின் நோக்கம்

புது சிருஷ்டி கிறிஸ்துவின் பூரண வளர்ச்சியடைவதற்கு நம்முடைய உபத்திரவங்கள் இன்றியமையாதது (எபேசியர் 4:15, 16). இந்தப் பாடுகளின் வழியாக கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியத்திற்குள் பிரவேசிக்கிறோம் (1 கொரிந்தியர் 10:16). நாம் பவுலோடு சேர்ந்து, "ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" (ரோமர் 6:5) என்று கூறலாம். தேவனோடு நாம் பலியின் உடன்படிக்கையில் இருக்கும்வரையில் எப்படிப்பட்ட விளைவுகளை அடைந்தாலும் நம்முடைய ஜீவன்களைத் தொடர்ந்து இழக்க வேண்டும்.

நம்முடைய உடன்படிக்கையிலுள்ள விசுவாசம், கிறிஸ்துவின் சாயலுக்கு நம்மை வளர்ச்சியடையச் செய்யும். நம்முடைய நம்பிக்கையின் உச்சநிலையை வெற்றிகரமாக அடைந்தால்: "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ள வேண்டும்" (1 கொரிந்தியர் 15:53) குறித்த காலத்தில், நம்முடைய குணங்கள் கிறிஸ்துவைப்போல மாறினால், திரைக்கு அப்பால் இயேசுவைப்போல, அதே தெய்வீக சுபாவத்தில் பங்குபெற்று, அவர் இருப்பதுபோலவே நாம் அவரைக் காணுவோம் (1 யோவான் 3:2). பவுலின் வார்த்தைகள் நம்மை உற்சாகப்படுத்தட்டும். "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை

மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்" (2 தீமோத்தேயு 2:12).

## இயேசுவின் வாழ்க்கையின் முடிவு

இயேசு பிடிபட்டார். சட்டத்திற்குப் புறம்பாக தீர்ப்பளிக்கப்பட்டது, நியாயந்தீர்க்கப்பட்டார். ஆயினும் ரோம சட்டத்தின் கீழ் யூதர்கள் மரணம் என்ற இறுதி தீர்மானம் தர இயலாது. ஆகவே, அவர்கள் இயேசுவை பிலாத்துவிற்கு முன் நிறுத்தினார்கள். தேவனுடைய குமாரனுக்கு எதிராகப் பேசும் படி சாத்தான் தன்னுடைய வல்லமையைக்கொண்டு ஜனங்களை ஏவினான். அந்தப் போர்ச் சேவகர்கள் கிளைகளிலிருந்து முள்ளுகளை வெட்டி, ஒரு முடியைப் பின்னி இயேசுவின் தலையின்மேல் வைப்பதற்குச் சாத்தான் ஏவியிருப்பானா? நாம் இதுவரையில் பார்த்தப்படி, வசனங்களில் முழுவதிலும், முள்ளுகள் விழுந்துபோன மனுஷனுக்குமேல் செலுத்தப்படும் சாத்தானுடைய தாக்கத்திற்கும், வல்லமைக்கும் தொடர்புடையதாக உள்ளது. இயேசுவின் தலையின்மேல் வைக்கப்பட்ட அந்த முள்ளினால் பின்னப்பட்ட கிரீடம், சாத்தான் இயேசுவின்மேல் பெற்ற வெற்றியை ஒரு காட்சியாகக் காண்பிக்கிறது. ஒரு சிறிய காலம் இயேசு தன்னுடைய எதிராளியின்மேல் வெற்றிப் பெற்றதைப்போல சீஷர்களுக்குத் தோன்றியது. சாத்தான் அவர்மேல் வல்லமை கொண்டவனாகக் காணப்பட்டான். ஆனால் உண்மையில் ஒருநாளில் இந்தப் பூமியின்மேலுள்ள சாபத்தை நீக்கிப்போடுவார் என்பதை நினைவுப்படுத்தும்படியாக அவர் விசுவாசத்தோடு அந்த முள் கிரீடத்தை அணிந்துகொண்டார்.

இயேசு தேவனுடைய குமாரன் என்ற இயேசுவின் கோருதலை சாத்தான் கீழ்ப்படுத்தியதுபோல் தோன்றுகிறது. இயேசு சிலுவையில் அறையப்பட்டு, அடக்கம் பண்ணப்பட்டார். ஆனால் அதுவே முடிவாக இருக்கவில்லை. வல்லமையுள்ள தேவனுடைய சர்வவல்லமையினால் மூன்றாம் நாளில் நம்முடைய ஆண்டவரை மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பினார். நாற்பது நாட்களுக்குப்பின் இப்போது நமக்காகப் பரிந்துபேசும்படிக்கு தேவனிடத்தில் அவர் பரமேறினார் (எபேசியர் 1:19-23). ஆனால் சாத்தானைக்குறித்து என்ன சொல்லுவோம்?

இயேசு உயிர்த்தெழுந்தப் பின்னும் சாத்தான் அவனுடைய வேலையை விடவில்லை. மாம்சத்தின் ஒரு முள்ளின் வழியாக அப்போஸ்தலராகிய பவுலை உபத்திரவப்படுத்தினான். அதுபோல, நம்மையும் மாம்சத்தின் "முள்ளுகளின்" வழியாக சோதிக்கிறான். ஆயினும் சாத்தானையும் அவனுடைய முள்ளுகளையும் ஜெயிப்பதற்குத் தேவனுடைய கிருபை நமக்குப் போதுமானதாக உள்ளது. "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (2 கொரியர் 2:14). நம்முடைய ஆண்டவரின் விசுவாசத்தினாலே, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது. நாம் கிறிஸ்துவுக்குள் விடுதலைப் பெற்றுள்ளோம்.

## இறுதியான பாடங்கள்


"மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன் மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும், சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" (வெளிப்படுத்தல் 20:10). கால போக்கில் சாத்தான் அழிக்கப்படுவான். அவனுடைய தாக்கங்கள் நித்தியமாக மறைந்துவிடும். இனி ஒருபோதும் மனுக்குலம் முள்ளுகளினால் துயரப்படமாட்டார்கள். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறும். "முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும்; காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்; அது கர்த்தருக்குக் கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும்" (ஏசாயா 55:13).

இயேசுவின் பலியின் வேலையினால் ஆசீர்வதிக்கப்பட்ட அனைவரும், நன்றியோடு அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற முயற்சிப்போம். நம்முடைய சித்தங்களைக் கட்டுப்படுத்துவோம். ஒவ்வொரு நாளும் நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு, நம்மை நாம் வெறுப்போம். சிலுவையைக் கடந்து நித்தியமான மகிழ்ச்சியும், மகிமையின் கிரீடமும் காத்திருப்பதினால் இயேசுவை நோக்கி அவருக்குப் பின் செல்லுவோம்.

அப்போஸ்தலனாகிய பவுலின் மாதிரியின் உண்மையை எடுத்துக்காட்டுவதற்கு கடும்முயற்சி எடுப்போம். "நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2 தீமோத்தேயு 4:7, 8).

**சரியான மனநிலையைக் காத்துக்கொள்ளுதல்**

# சோதனைகளைத் தழுவுதல்



Alex Zardja

"என் சகோதரரே நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" (யாக்கோபு 1:2, 3).

சோதனைகளைத் தழுவ வேண்டுமா? தவிர்க்க வேண்டுமா? அல்லது உபத்திரவப்பட வேண்டுமா? கிறிஸ்தவர்களாகிய நாம் மகிழ்ச்சியில் வேதனைப்பட வேண்டுமா? அல்லது சோதனைகளின்போது, முறையிட்டுக்கொண்டு, முறுமுறுத்து நிலைக்குலைய வேண்டுமா? கிறிஸ்துவின் வளர்ச்சியின் ஒரு முக்கியப் பகுதியாக சோதனைகள் கட்டித்தழுவப்பட வேண்டும் என்றே நாம் கருதுகிறோம். ஒரு சோதனையைத் தழுவக்கூடிய காரியமானது, ஒரு கள்ளிச்செடி அல்லது கற்றாளைத் தழுவுவதுபோல நம்முடைய மாம்ச சிந்தை சித்தரிக்கும். ஆயினும் நம்முடைய புதிய சிருஷ்டி வேறுவிதமாகச் சிந்திக்க வேண்டும்.

**சோதனை என்பது என்ன?**

செயல் நிறைவேற்றம், தரம் அல்லது ஒருபொருள் அல்லது ஒருவருடைய உகந்த தன்மையை சோதிப்பதே சோதனையின் சொற்பொருள் விளக்கமாகும். நாம் செய்யக்கூடிய தவறுகள், அல்லது நாம் எடுக்கக்கூடிய தவறான முடிவுகளின் பின்விளைவுகளை எப்போதும் சோதனைகள் என்று சொல்ல முடியாது. கிறிஸ்துவினிமித்தம் உபத்திரவப்படுவதும் நம்முடைய குணங்களில் நல்ல மாற்றங்களை ஏற்படுவதற்கான எந்த அனுபவங்களும் உண்மையான சோதனையாகும் (1 பேதுரு 2:19-20). நம்முடைய மனநிலை சரியானதாக இருந்தால், ஒவ்வொரு அனுபவமும் நம்முடைய நற்குணங்கள் மேம்படும். நம்முடைய மனநிலை சரியானதாக இராவிட்டால் நம்முடைய நற்குணத்தின் வளர்ச்சியைத் தடை செய்யும்.

ஜனங்கள் வேதனையிலும் உபத்திரவத்திலும் மகிழ்வது இயல்பான சோதனைகளின் நோக்கத்தைப்பற்றி வேதாகமத்திலுள்ள முக்கியத்துவங்களைக் கவனிக்க வேண்டும். இந்த நோக்கத்தைப்பற்றி புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும் சேகரிக்கலாம் (1 கொரிந்தியர் 10:11; எபிரெயர் 11).

நம்முடைய மாம்சம் ஒரு வித்தியாசமான திசையில் போகும்படி விரும்புவதால், தேவனுடைய கற்பனைகளைப் பொருட்படுத்தாமல் அதைத் தவிர்ப்பதன் விளைவாகவே பெரும்பாலும் சோதனைகள் ஏற்படுகிறது. யோனாவின் எடுத்துக்காட்டை கருத்தில்கொள்ளலாம். கப்பலுக்கு வெளியே எறியப்பட்டு, ஒரு பெரிய மீனினால் விழுங்கப்பட்டார். இதுபோன்ற கடுமையாக உபத்திரவங்களை யோனா அனுபவித்தார்.

"அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது என்றார். அப்பொழுது யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி, தர்ஷீசுக்குப்போகிற ஒரு கப்பலைக்கண்டு, கூலிகொடுத்து, தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்" (யோனா 1:1-3).

தன்னுடைய வீட்டைவிட்டுப் புறப்பட்டு நினிவேக்குச் சென்று அங்குள்ள ஜனங்களை மனந்திரும்புவதற்கான அழைப்பைக் கொடுக்க வேண்டுமென்ற கட்டளையை யோனா தேவனிடமிருந்து பெற்றார். அவருக்குக் கீழ்ப்படிய விருப்பம் இல்லாததினால் இது அவருக்கு மிகுந்த திகைப்பை ஏற்படுத்தியது. சிந்திக்கும் வழியை மாற்றிக்கொண்டு தேவனுடைய வழிநடத்துதலுக்குப் பின் தொடருவதைக் காட்டிலும், தர்ஷீசுக்கு விரைந்தோடி அந்தக் கட்டளையை தவிர்த்துவிடலாம் என்று யோனா சிந்தித்தார். ஸ்பானியா தேசத்திலுள்ள தரிசு, அதாவது தேவனுடைய கட்டளைகளிலிருந்து ஓடிப்போவதற்கு முயற்சித்து கப்பல் ஏறிய இடமாகிய யோப்பா இஸ்ரயேலுக்கு நேர் மேற்கிலுள்ள இடமாகும். யோனா அறிந்திருந்த உலகில் தர்ஷீசு கடைசியாக இருந்தது.

கூடுமானவரையில் வெகுதூரம் செல்லுவதினால் அவருடைய இந்தச் சூழ்நிலையிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று யோனா சிந்தித்தார். இது ஒரு தீர்வாகத் தோன்றியது. ஆனால் அவர் நினைத்ததுபோல நடக்கவில்லை. தர்ஷீசின் ஜனங்கள் யாபேத் சந்ததியினராக இருந்தார்கள். அதாவது சகோதரர் ரசல் கண்டறிந்தபடி அவர் எழுதின நான்காம் தொகுப்பில்,

பொதுவாக இவர்கள் ஐரோப்பியராக இருந்தார்கள். மேலும் விரிவாக, மேற்கத்திய உலகம் அமெரிக்கா முதலாளித்துவம் சார்ந்தவர்களாக இருப்பார்கள் என்று குறிப்பிடுகிறார். நம்முடைய நாட்களிலும் பலர், நம்முடைய சகோதரர்கள் உட்பட சோதனைகளிலிருந்து அதாவது மத ரீதியான, சமுதாயப் பிரச்சனைகள் அல்லது பொருளாதாரப் பிரச்சனையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு கிழக்கிலிருந்து மேற்குக்கு விரைந்தோடுவார்கள். இது "அக்கரைப் பச்சை" போல தோன்றலாம். ஆனால் அப்படியிருக்க வேண்டிய அவசியமில்லை.

ஆண்டவரால் அனுமதிக்கப்பட்ட சோதனைகளிலிருந்து நாம் தப்பிக்கலாமா? "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1 கொரிந்தியர் 10:13). நாம் பொறுமையோடு சோதனையைச் சகிக்க வேண்டும். ஆண்டவர் தப்பிக்கும் வழியைக்கொடுக்கும்வரையில் காத்திருக்க வேண்டும். மொத்தமாக அவர் பெற்றுக்கொண்டது இன்னும் கடுமையான சோதனையான இருந்தது.

"கர்த்தர் சமுத்திரத்தின்மேல் பெருங்காற்றை வரவிட்டார்; அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. அப்பொழுது கப்பற்காரர் பயந்து, அவனவன் தன்தன் தேவனை நோக்கி வேண்டுதல்செய்து, பாரத்தை இலேசாக்கும்படிக் கப்பலில் இருந்த சரக்குகளைச் சமுத்திரத்தில் எறிந்துவிட்டார்கள்; யோனாவோவென்றால் கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிப்போய்ப் படுத்துக்கொண்டு, அயர்ந்த நித்திரை பண்ணினான்" (யோனா 1:4-5).

யோனா புயலைப்பற்றி எந்த கவலையும் படவில்லை என்று தோன்றுகிறது. ஆனால் கப்பலோட்டிகளின் பொறுப்புகள் மற்றும் கப்பல் ஓட்டுபவர்களின் செயலும் யோனா நித்திரை செய்வதும் நாம் இன்றைய உலகத்தோடு ஒப்பிட்டு சிலர், கவலைப்படக்கூடிய அந்தக் கப்பலோட்டிகளைப்போல பாரத்தை நீக்கினால், பிரச்சனையில்லாமல் கப்பலைச் செலுத்தலாம் என்று எண்ணுகிறார்கள். மற்றவர்கள் யோனாவைப்போல, பிரச்சனைகளைத் தவிர்க்க விரும்புகிறார்கள். யோனா ஒரு தவறான முடிவை எடுத்தார் என்பதை அறிந்திருந்தார். மேலும் இந்தப் புயல் யேகோவா தேவனிடமிருந்துவரும் அறிகுறி என்பதையும் அவர் அறிந்திருக்க வேண்டும். ஆனாலும் அதை அவர் தவிர்க்கும்படி புயலின்போது நித்திரை செய்தார்.

இயேசு சமாதானமாக இருந்ததினால் கொந்தளித்த கடலின் மத்தியில், அயர்ந்து நித்திரை செய்தது போலிருந்தது (மாற்கு 4:37-39). யோனாவின் நித்திரை இப்படிப்பட்ட ஒரு அடையாளமாக இருக்கவில்லை. அவர் கீழ்ப்படிதலைக்குறித்து அக்கறையுள்ளவராக இருந்தாலும், அவர் என்ன செய்து கொண்டிருந்தாரோ அதற்கு விழித்தெழச் செய்ய வெளிப்புற தூண்டுதல் தேவைப்பட்டது.

"அப்பொழுது மாலுமி அவனிடத்தில் வந்து: நீ நித்திரைப்பண்ணுகிறது என்ன? எழுந்திருந்து உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள் நாம் அழிந்துபோகாதபடிக்குச் சுவாமி ஒருவேளை நம்மை நினைத்தருளுவார் என்றான். அவர்கள் யார்நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிடிட்டதென்று நாம் அறியும்படிக்குச் சீட்டுப்போடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு சீட்டுப்போட்டார்கள்; யோனாவின் பேருக்குச் சீட்டு விழுந்தது. அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி: யார்நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நீ எங்களுக்குச் சொல்ல வேண்டும்; உன் தொழிலென்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்? உன் தேசம் எது? நீ என்ன ஜாதியான் என்று கேட்டார்கள். அதற்கு அவன்: நான் எபிரெயன்; சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன் என்றான்" (வசனம் 6-9).

நம்முடைய அனுபவங்களில், "நீ என்ன செய்தாய்? ஏன் இந்தச் சூழ்நிலை?" என்று நம்முடைய சொந்த மனசாட்சி நம்மைக் கேட்கும். இந்தக் கடுமையான அனுபவங்களுக்குள் நம்மைக்கொண்டு வந்ததைக்குறித்து சிந்திப்பது நமக்கு இலாபகரமாக இருக்கும். அந்தப்பிரச்சனையைக் கண்டு பிடித்து, அதற்குப் பின் அதற்காக ஜெபித்து, அதிலிருந்து வெளியே வருவதற்கு தேவனுடைய வழி நடத்துதலுக்காகக் காத்திருக்க வேண்டும். ஏனென்றால் தனது சொந்த விருப்பத்தைக் கிரயமாக்கி கர்த்தரின் வழியைப் பின்பற்றுதலை அவர் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதால் யோனாவின் வழி வெளி ஏறும்படி நீண்டதாயும் சுற்றுகிறதாயும் இருந்தது.

**சோதனைகளைத் தழுவுதல்**

நம்முடைய சோதனைகளை உண்மையில் தழுவிக்கொள்ள எவ்வாறு கற்றுக்கொள்வது? "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து

வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்." (1 பேதுரு 2:21-23).

நாம் சோதனைகளைச் சந்திக்கும்போது இயேசுவின் மாதிரியைக் கண்ணோக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலையை நம்மால் முடியாது என்று நம்முடைய மாம்சம் கூறும். ஆனால் நம்மால் முடிந்தவரையில் விடாமுயற்சி எடுக்க வேண்டும். இதைப் பெற்றுக்கொள்வது கடினமான காரியம் என்று எளிமையாக எண்ணிக்கொண்டு, நம்முடைய நிலையைத் தாழ்த்திக்கொள்ள வேண்டாம்.

பலவிதமான சோதனைகளை மிகுந்த சந்தோஷமாக "எண்ணுங்கள்" என்பதன் பொருள் என்ன? இதற்கான கிரேக்க வார்த்தையின் பொருள் "சிந்திப்பது குறிப்பான நோக்கு ஆதிக்கம் மனதில் உறுதியான சிந்தை" என்பதாகும். நம்முடைய சிந்தை ஊசலாடக்கூடாது. "ஆம் நான் மகிழ்ச்சியாக உள்ளேன்," "என்னுடைய நற்குணங்களுக்கு இது ஒரு நல்ல நேரமாக இருக்கிறது," அல்லது "ஆண்டவர் செய்ததையே நானும் செய்கிறேன்." இப்படிப்பட்ட சிந்தைகள் நம்முடைய மனதை ஆள வேண்டும்!

இயேசு தம்முடைய முடிவு பலன்மீது கவனமாய் இருந்ததினால் சாகும்வரை உண்மையாய் இருக்க, அவருக்கு அது உதவிற்று. "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலிப்பியர் 2:5-8).

அதுபோல பரலோக தந்தைக்குப் பிரியமான ஒரு குணலட்சணங்களை வளர்ச்சி அடைவதற்கான ஒரு செயல்முறைத் திட்டத்தின்மேல் கவனம் வைக்க வேண்டும். நாம் அன்பாகவும், தாழ்மையாகவும், பொறுமையாகவும் இருக்க வேண்டுமென்று சிந்தித்தால் மட்டுமே நம்முடைய குணங்கள் வளர்ச்சியடையாது. அதன்படி நாம் செயல்பட்டால் மட்டுமே வளர்ச்சியடைய முடியும். அதுவரையில் அவைகள் நம்முடைய விருப்பங்களாக மட்டுமே இருக்கும்.

அடுத்து நாம் ஒரே சிந்தையுள்ளவர்களாக இருக்க வேண்டும். மாம்சத்தின் காரியங்களைச் சிந்திக்காமல், ஆவிக்குரிய காரியங்களை மட்டுமே சிந்திக்க வேண்டும் (ரோமர் 8:5-13). நித்தியமாக நாம் பெற்றுக்கொள்ளக்கூடியவைகளை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, இந்த வாழ்க்கையில் நாம் இழக்கக்கூடியவைகள் மதிப்பில்லாதது என்பதை நாம் நம்முடைய மனதில் பதிய வைப்பது மிக அவசியம். "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" (யாக்கோபு 1:12).

அநேக விதமான ஆசீர்வாதங்களை வருங்காலத்தில் நாம் ஆண்டவரோடு பெற்றாலும், இக்காலத்தில் சில ஆசீர்வாதங்களை விசுவாசத்தினால் பெற்றுக்கொள்வோம். உதாரணமாக நமது வாழ்வில் நடக்கும் அனைத்தும், ஒரு நோக்கத்திற்காகவும் மற்றும் நீண்ட காலத்தின் ஊடாக, நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பயனுள்ளதாய் இருக்குமென்பதில் நாம் உறுதியுடன் இருக்கலாம். இதை சகோதரர் ரஸல் இவ்வாறாக வெளிப்படுத்துகிறார்.

"ஆரோக்கியமான மனதின் சிந்தனை மற்றும் தேவனுடைய வார்த்தையின் கட்டளைகள் . . . சோதனைகள், கஷ்டங்கள் மற்றும் வாழ்க்கையின் எதிர்ப்புகள் அனைத்துமே சரியான பாடங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டால், இவைகளனைத்தும் மாறுவேஷத்தில் வந்த ஆசீர்வாதங்கள் என்று உறுதியளிக்கிறது . . . ஒருவர் உபத்திரவத்திலும் மகிழ முடியும். அவர் பாடுகளை விரும்பினதால் அல்ல தேவனுடைய அடைக்கலத்தின் கீழ் நமக்குக் கிடைக்கும் பலனாய் இருக்கும். பொறுமை, அனுபவம் குணலட்சணத்தை விரும்பினதினால்தான், நமக்காக தேவன் உறுதிப்படுத்தியுள்ள இவையெல்லாம் அனைத்துப் பாடுகளையும் சரியாக கையாள முடிந்தது" (R2737).

"பலவிதமான சோதனைகள் வரும்போது அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்ற வாக்கியம் இதோடு முடிவதில்லை. "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" (யாக்கோபு 1:2-3) என்று அவர் தொடருகிறார். பவுலைப் போல நாமும் "கிறிஸ்துவினால் ஜெயிக்கப்பட" விரும்புகிறோமா (பிலிப்பியர் 3:7-8)? அப்படியிருந்தால், நமக்கு அடுத்திருக்கும் துன்பத்திற்கு அப்பாலிருப்பதைச்

சிந்திப்பது மிக அவசியம். நம்முடைய இயல்பான உணர்வுகளிலிருந்து மேல் நோக்கி எழுப்புவதற்கு விரும்ப வேண்டும்.

நம்முடைய உணர்வுகளை மேற்கொள்வதற்கு, நம்முடைய எதிராளிகளாகிய உலகம், மாம்சம் மற்றும் சாத்தானுக்கு செவிகொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். "இதனால் நமக்கு நன்மை உண்டாகும்" என்று இவைகள் எப்போதும் கூறாது. இந்த எதிரிகள் நம்மை வேலைக்குள்ளாக்கிவிடும். கூடுமானால், யோனாவைப்போல் நாம் மனம் வருந்துமளவுக்கு ஏதாகிலும் செய்ய தூண்டிவிடும். "உபத்திரவங்கள் பொறுமையைத் உண்டுபண்ணும்" என்ற அப்போஸ்தலனாகிய பவுல் மற்றும் யாக்கோபு கூறுகிறார்கள். "அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து" (ரோமர் 5:3). மற்றும் இதுவே நம்முடைய மகிழ்ச்சியின் காரணமாக உள்ளது. பொறுமைக்கு உறுதி, நீடிய சகிப்பு மற்றும் நீடிய பொறுமை என்று வேதாகமத்தில் பொருள் கூறப்படுகிறது.

உயிர்த்தெழும் உலகம் பரிசுத்தமான பெரும்பாதையில் பயணிக்கும்போது அவர்களுக்கு ஊழியம் செய்யும்படிக்கு தெய்வீக சுபாவத்தில் பங்கெடுப்பதற்கான – நம்முடைய இறுதி இலக்கை சிந்திக்க வேண்டும். இந்த வெகுமதியைப் பெறும்படியாக, தீமைக்கு எதிரான எந்தப் போராட்டத்தையும் சகிப்பதற்கு நாம் திராணியுள்ளவர்களாக இருக்க வேண்டும். எப்படிப்பட்ட சூழ்நிலையானாலும் சரி, இதை நித்தியத்திற்கும் செய்ய ஆற்றலுடையவர்களாக இருக்க வேண்டும். இந்த உலகம் இப்படிப்பட்ட ஒருமன நிலையைப் பெறுவதற்கும் நாம் உதவிசெய்ய வேண்டும். இப்படியாக பொறுமையின் முக்கியத்துவத்தையும், சோதனைகளின் மூலமாக அதை எவ்வாறு பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அதைப் பூரணப்படுத்துவதற்கு இன்னும் அதிகமான சோதனைகளின் வழியாகச் செல்ல வேண்டும் என்பதைக் குறித்துப்பார்த்தோம்.

பழைய ஏற்பாட்டிலிருந்து மற்றொரு எடுத்துக்காட்டைக் காணலாம்.

புறஜாதியாரின் சிறையிருப்பில் வாழ்ந்துகொண்டிருந்தாலும், தேவனுடைய நியாயப் பிரமாணத்திற்கு வாழ்ந்துகொண்டு, சோதனைகளைத் தழுவி வாழ்ந்ததற்கான சிறந்த எடுத்துக் காட்டுகள் - தானியேலும் அவருடைய மூன்று எபிரெய நண்பர்களுமே (தானியேல் 1). இராஜாவின் மேஜையில் மாம்சம் புசிப்பதற்குக் கட்டளைப் பெற்றபோது, அவர்கள் அந்தப் பிரச்சனையிலிருந்து தப்பிக்கொள்ள முயற்சிக்கவில்லை. அதற்குப்பதிலாக, ஒரு தீர்வைக் காணும்படிக்கு ஆண்டவருடைய ஞானத்தைப் பயன்படுத்தினார்கள்.

"நாங்கள் இராஜாவின் மேஜையில் உட்கார்ந்து புசிக்க மாட்டோம்" என்று தானியேல் கூறவில்லை. இந்தச் சூழ்நிலையிலிருந்து தப்பிக்க முயற்சிக்காமல் அங்கீகரிக்கக்கூடிய ஒரு பாதையைத் தேடினார்கள். பாபிலோனின் சிறையிருப்பில் இருந்துகொண்டே தேவனுக்குப் பிரியமானதைச் செய்யக்கூடுமா? "ஆண்டவருடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்கு வேதவாசிப்பு மட்டுமே நம்முடைய கடமையாக இராமல், முதலாவது நாம் அந்தச் சூழ்நிலைகளையும் முறைமைகளையும் கருத்தில்கொண்டு, தெய்வீக அங்கீகாரத்தைப் பெற்றிருக்கும் ஒரு மிதமான வாழ்க்கையை தெரிந்தெடுத்துக்கொள்ள தேட வேண்டும்." இரண்டாவதாக, கூடுமானளவுக்கு மற்றவர்களுக்கு உபத்திரவம், வாழ்க்கை நலன்களில் குறைவுப்பட்ட நிலை மற்றும் மற்றவரிடம் காட்ட முயற்சிக்க வேண்டாம். அதற்குப்பின் ஆண்டவருடைய ஞானம் மற்றும் அவருடைய அருளின்மேல் நம்பிக்கையோடு சார்ந்திருக்க வேண்டும்" என்று ஜூலை 28-ஆம் தேதி மன்னாவில் நாம் வாசிக்கிறோம். நாம் இந்த உலகத்தில் இருந்தாலும், இந்த உலகத்தைவிட்டு பிரிந்துவாழ வேண்டும். நாம் தனிமையில் ஒரு துறவியைப்போல வாழ வேண்டியதில்லை. மாறாக எல்லா சூழ்நிலைகளிலும், தேவனுடைய பணி செய்வதில் நம்மால் முடிந்தவரையில் முழுமையான உள் நோக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

அதற்குப்பின், அந்தப் பொன்னான சிலையை வணங்க வேண்டும் (தானியேல் 3) என்ற சூழ்நிலை வந்தபோது, தங்களுடைய முடிவில் எந்தவிதமான மாற்றங்களும் இருக்கப்போவதில்லை என்று சாத்ராக் மேஷாக் ஆபேத் நெகோ அறிந்தார்கள். ஆயினும் அவர்களுடைய மறுப்பை பகிரங்கமாக மற்றவர்களின் முன்னிலையில் அறிவிக்கவில்லை. அவர்கள் அமைதியாக இராஜாவை எதிர்த்தார்கள். அவர்கள் யேகோவா தேவனை மட்டுமே வணங்கமுடியும் என்பதை விவரித்தார்கள். இப்படிப்பட்ட காரியத்திற்காக வரும் பின்விளைவுகளை ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் மனப்பூர்வமாக சம்மதித்தார்கள். பொதுவுடைமையின் கீழ் வாழ்ந்த அநேக சகோதரர்கள் இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எதிர்நோக்கினார்கள். இவர்கள் யேகோவா தேவனை மட்டுமே சேவிக்க வேண்டும் என்ற அர்ப்பணிக்கப்பட்ட பொருத்தனைகளை அத்துமீறி செயல்படுவதைக்காட்டிலும் சிறைக்குச் சென்றனர்.

**சோதனைகளுக்கான நம்முடைய செயல் திட்டம்**

நாம் ஒரு சோதனையில் இருக்கும்போது நம்முடைய செயல் திட்டம் என்ன? "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல என்று எண்ணுகிறேன்" (ரோமர் 8:18). சோதனையைத் தாண்டியுள்ள நித்தியமான தொலை நோக்கைக் கண்டு, உதவிக்காகவும், வழிநடத்துதலுக்காகவும் ஆண்டவரிடம் ஜெபிக்கலாம், உற்சாகமான சங்கீதங்களையும் கீர்த்தனைகளையும் பாடலாம். சகோதரர்களிடம் பேசலாம், குறிப்பாக நம்முடைய அநுபவங்களுக்குச் சம்பந்தப்பட்ட பிரசங்கங்களைக் கேட்கலாம். மனஅழுத்தம் மற்றும் கஷ்டங்களின்போது, நமக்கு உதவி செய்யக்கூடிய சிறந்த காரியங்கள் என்னவென்பதை நாம் தெளிவாகத் தீர்மானிக்க வேண்டும்.

நாம் தேவன்மேல் நம்பிக்கைக்கொண்டு, அவரைச் சார்ந்திருந்தால், நாம் விழுந்துவிடாத படிக்கு அவர் எந்தச் சோதனையிலும் இருந்து நமக்கு விடுதலையை அளிப்பார் (2 பேதுரு 2:6-9). நாம் தாங்கக்கூடிய அனுபவங்களைத்தவிர, அவர் எதையும் அனுமதிக்கமாட்டார். நம்முடைய ஆசீர்வாதங்களை "மலை உச்சியின்" அனுபவங்கள், கடுமையான நேரங்களில் ஆவிக்குரிய விதத்தில் நம்மைப் புதுப்பிப்பதற்கான வழியாகும். நம்முடைய இருதயத்தின் எண்ணங்கள் சரியாக இருந்தால், பொறுமையோடு சகிக்க இவைகள் நமக்கு பலத்தைத்தரும்.

இரண்டு பொதுவான தவறுகளைத் தவிர்க்க வேண்டும். இந்த வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை மட்டுமே எதிர்பார்த்தல், அல்லது நம்மை ஒரு உறுதியான மனது அல்லது உடல் ரீதியான உபத்திரவத்தில் நிலைநிறுத்துவது. இந்த இரண்டு கருத்துக்களுமே வசனங்களோடு இசைந்து இருப்பதில்லை. நாம் இந்த உலகத்தின் வாழ்க்கையில் வெற்றிக்கான அல்லது மிக அமைதியான பாதையில் செல்லக்கூடியவர்கள் அல்ல. அல்லது நம்முடைய விசுவாசத்தை நிரூபிப்பதற்கு நாம் வேண்டுமென்றே உபத்திரவங்களைத் தேடிச்செல்லக்கூடாது.

முடிவாக நம்முடைய சோதனைக்கான "காரணத்தை" தேடுவதில் நாம் மூழ்கிவிடக்கூடாது. அந்த அனுபவத்திற்கான காரணம் தெளிவாக இராதிருந்தால், விழித்திருந்து ஜாக்கிரதையோடு ஜெபம்பண்ணக்கடவோம். "குறித்த காலத்தில் இந்த சோதனைக்கான காரணத்தை நாம் புரிந்து கொள்வோம்." சோதனைகளின் வழியாகச் செல்வது என்றுமே எளிதானக் காரியமல்ல. ஆயினும் அவைகள் இல்லாமல் நாம் போகவிரும்பும் இடத்திற்குப் போவதற்கு வேறு வழியில்லை. இவைகளின் வழியாகப் பிரவேசிப்பதற்கும், ஆண்டவருக்குப் பிரியமான குணங்களில் நாம் வளர்ச்சியடைவதற்கும் உதவியாக தேவைப்படும் கருவிகள் வேதவசனங்களில் உண்டு. "நம்முடைய சோதனைகள் பல மில்லியன்கள் மதிப்புபெறும்; ஆகவே எந்தச் சோதனையையும் விரயமாக்காதீர்கள்" என்று அமெரிக்காவிலுள்ள ஒரு சகோதரி கூறினார்.


ஒவ்வொரு சோதனைகளிலும் "இப்போது எனக்கு ஒரு கடுமையான சோதனை உண்டு. எனக்கு இது மிகக் கடுமையாக உள்ளது, என்னைச் சுற்றியுள்ளவர்களையும் பாதிக்கலாம். மேலும் இது என்னுடைய உள்நோக்கம், நற்குணம் மற்றும் வாழ்க்கையின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தாதபடிக்கு பார்த்துக்கொள்வேன்." இந்த உலகத்தை இரட்சிக்கக்கூடிய திட்டத்தின் சரியான நோக்கத்திற்காக உள்ளன. மற்றும் தீமையின் அனுமதியினால் ஒரு மதிப்புமிக்க பாடத்தைக் கற்றுக்கொடுப்பது என்பதான அவருடைய வாக்குத்தத்தங்களை நான் நினைவுகூருவேன்.

இந்த நம்பிக்கையை சிந்தையில் கொண்டவராக கிருபாசனத்தண்டைக்குச் சென்று மன்னிப்பை வேண்டி, ஆசீர்வாதங்களை எண்ணி, சோதனையின் நோக்கத்தை வெளிப்படுத்து வதற்கான உதவிகளையும், தேவனிடம் கேட்டு, எதிர்த்துவரும் அந்தச் சவால்களையும், மாம்சத்தின் நோக்கங்களையும் மேற்கொள்வதற்கும் அதைத் தாங்குவதற்கான பலம், ஞானம் மற்றும் பொறுமைக்காகவும் விண்ணப்பிக்க வேண்டும்.

அதற்குப்பின் நான் எழுந்து தேவனுடைய கட்டுப்பாட்டிலும், வழிநடத்துதலின் கீழுள்ள அனைத்துக் காரியங்களையும், நம்பிக்கையுள்ள உள்நோக்கத்துடன் என்னால் முடிந்த சிறு சிறு காரியங்களைச் செய்வேன். மேலும் கூடுதலாக, நம்பிக்கைக்காகவும், ஞானத்திற்காகவும் கர்த்தரின் வார்த்தையினிடத்திற்கு கருணைக்காகவும், மன்னிப்பிற்காகவும், அவரின் கிருபாசனத்தண்டைக்குச் செல்வதை நான் தொடர்ந்து செய்வேன் மற்றும் கிறிஸ்துவுக்குள்ளாக என்னுடைய குணலட்சணத்தை வளர்த்துவதற்காகச் சிறு காரியங்களைச் செய்வதிலும் மகிழ்ச்சியடைவேன்.

உண்மையான ஒற்றுமையை மேம்படுத்துதல்

# இவர்கள் எல்லாரும் ஒன்றாயிக்கவும்



Euhen Dovhan, Ukraine

"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:21).

இந்நாளில் தங்களை விசுவாசிகள் என்று பாராட்டிக்கொள்ளக்கூடிய உலகத்தின் மத்தியில் ஐக்கியத்தைக் காணமுடிவதில்லை. ஆனால் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைக்கக்கூடிய அனைவர் மத்தியிலும் ஒருமனப்பாடு வேண்டுமென்று இயேசு உண்மையில் ஜெபித்தாரா? இல்லை, அவருடைய அடிச்சுட்டில் ஒருமித்து பின்பற்றக்கூடிய உண்மையான சபைக்காக ஜெபித்தார் - இவர்கள் ஒற்றுமை இரண்டு விதங்களாக இருக்க வேண்டும். தேவனுடைய உச்சிதமான பலியை அடிப்படையாகக்கொண்டு அன்பில் ஒற்றுமை மற்றும் நோக்கத்தில் ஒற்றுமையாக இருக்க வேண்டும். "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16).

தேவனுக்காக இயேசு கொண்டிருந்த அன்பின் விளைவாக, இந்த முழு உலகத்தின் மனுக்குலத்திற்கான ஒப்புரவாகுதலையும், ஆதாமுக்குத் தேவையான ஈடுகிரயத்தைக் கொடுக்கும் தேவனுடைய சித்தத்திற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். "நான் உங்களில் அன்பாய் இருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக்கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:12-13). இறுதியாக இதுவே இயேசுவின் அன்பின் வெளிப்பாடாக இருந்தது.

"ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்; சர்வாங்க தகனபலிகளும், பாவ நிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர். அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன்" (எபிரெயர் 10:5-7) என்று பவுல் நம்முடைய ஆண்டவரைப்பற்றிக் கூறுகிறார்.

"உங்களை நேசிப்பதுபோலவே உங்கள் அயலகத்தாரையும் நேசியுங்கள்" (லேவியராகமம் 19:18) என்று மோசேயினால் கொடுக்கப்பட்ட பிரமாணம், அதனுடைய பின்னடியார்களுக்கு கட்டளையிட்டது. "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவான் 13:34) என்று இயேசு கூடுதலாகக் குறிப்பிட்டார். அவருடைய ஜீவனையே கொடுக்குமளவுக்கு இயேசு நம்மை நேசிக்கிறார். நாமும் அவரைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்புகிறார். இந்தப் பூமியின்மேல் அவருடைய காலம் நிறைவுபெறும்போது, அதாவது அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன், இந்தப் புதிய பிரமாணத்தை இயேசு கொடுத்தார். வியாதியஸ்தரை சொஸ்தப்படுத்திக்கொண்டு, தேவனுடைய இராஜ்யத்தைப்பற்றி பிரசங்கித்து, மூன்றரை வருடங்கள் அவருடைய ஜீவனைக்கொடுத்தார். திரைக்கு இப்பக்கத்தில் இயேசு கட்டளையிட்ட அந்த இரண்டுவிதமான ஒற்றுமையை நாம் பெற்றுக்கொள்ள முடியுமா?

## தேவனோடும் கிறிஸ்துவோடும் உள்ள ஐக்கியம்

ஒருமைப்பாட்டின் முதல் பகுதியை நாம் கருத்தில் கொள்ளலாம்; நோக்கத்தில் ஒற்றுமை .

"இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்கு தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன். நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்." (பிலிப்பியர் 3:10-14).

கிறிஸ்துவுக்குள் உள்ள பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக ஓடும், ஒவ்வொரு சீஷர்களின் பொதுவான இலக்கை பவுல் இங்கு அடையாளப்படுத்துகிறார்.

"பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்." (1 கொரிந்தியர் 9:24-27) என்று பவுல் எழுதுகிறார்.

தமது மத்தியிலுள்ள உடன் சமுதாயம் மற்றும் தத்துவங்கள் சார்ந்த வேறுபாடுகளையும் பொருட்படுத்தாமல், கிறிஸ்துவைப்போல் ஆவதற்கு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் ஒரே நோக்கத்தில் ஐக்கியப்பட வேண்டும். "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாய் இருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:26-28).

**சரீரத்தில் ஒருமனப்பாடு:**

"நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும் சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்" (1 கொரிந்தியர் 12:13). நாம் கிறிஸ்துவின் ஒரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பெற்றுள்ளோம் என்று பவுல் எழுதுகிறார். அவர்களின் படிப்பு ஆதி தோற்றம் அல்ல, சமுதாய நிலையைப் பொருள்படுத்தாமல், நம்முடைய எல்லா சகோதரர்களோடு ஐக்கியத்தை உணர முடிகிறதா? சரீரம் ஆவிக்குரிய ரீதியில் சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகளின் ஒரு கூட்டம். "ஆகையால், இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்" (2 கொரிந்தியர் 5:16). இந்த உண்மையான சரீரத்திற்குள் எந்தவிதமான பூமிக்குரிய பிரிவினைகளும் காணப்படக்கூடாது. "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாய் இருக்கிறோம்" (ரோமர் 12:5).

இதே கருத்தை பவுல் எபேசியர் 4:3-லும் குறிப்பிடுகிறார். "அன்றியும், என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன்வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது." உண்மையான விசுவாசிகள் மத்தியில் ஒரே நோக்கத்திற்கான ஐக்கியத்தைப் பார்த்துக்கொள்ள முயற்சிக்கிறோமா? இன்று, வசனங்களிலுள்ள உண்மையான உபதேசங்களைப் புரிந்துகொள்ளுவதில் குறைபாடுகள் இருப்பதினால், மதவகுப்புகளின் மத்தியில் அநேக பிரிவுகள் காணப்படுகிறது. சிந்தை மற்றும் ஆவியில் அதிகமான ஒற்றுமையின்மை காணப்படுகிறது. நாம் முடிவு காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒரே நோக்கத்திற்காக ஐக்கியப்படுபவர்கள் மட்டுமே, இந்தக் கடினமான காலங்களைப் புரிந்துகொள்ள முடியும். கோதுமை மணி (உண்மையான கிறிஸ்தவர்கள்) மற்றும் களைகள் (பொய் கிறிஸ்தவர்கள்) பிரிக்கப்படும்போது, சுவிசேஷ யுக அறுவடையினிமித்தமாக, சபைக்குள் குழப்பங்கள் ஆட்சிசெய்யக்கூடிய காலமாக இருக்கின்றது. மத்தேயு 13:30 காண்க.

இயேசுவின் உபதேசத்தைச் சரியாகப் புரிந்துகொண்டவர்கள் சபையாக இருப்பதற்கு உத்தரவாதம் பெற்றுவிட்டார்கள் என்று பொருளல்ல. "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக் கக்கடவன்" (1 கொரிந்தியர் 10:12) என்று பவுல் கூறுகிறார். "சிறுமைப்பட்டவர்களை நியாயத்திலே நடத்தி, சிறுமைபட்டவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்" (சங்கீதம் 25:9) என்று சங்கீதக்காரர் கூறுகிறார்.

**சகோதரர்களுக்கான அன்பு:**

1 கொரிந்தியர் 12:12-27-ஆம் வசனங்களில் சொல்லப்பட்ட அறிவுரைகள், கீழ்க்காணும் இவ்வார்தைகளோடு நிறைவடைகிறது. "சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக்கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார். ஆதலால் ஒரு அவயம்

பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும்கூடச் சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்."

நாம் மனத்தாழ்மையாக இருந்தால்மட்டுமே ஆண்டவர் நம்மை வழிநடத்தமுடியும். "மனத்தாழ்மை" என்ற வார்த்தையின் பொருளென்ன? (G5012) ஸ்டிராங்ஸ் அகராதியின்படி பணிவு (சிந்தையில்) என்று பொருள்படுகிறது. மனதிலுள்ள இந்தப் பணிவைப்பற்றி பிலிப்பியர் 2:3-ஆம் வசனத்தில் பவுல் பொருள் கூறுகிறார். "ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்"

இந்த வசனத்தைக்குறித்து மறுபதிப்பு 3284 பக்கத்தில் சகோதரர் ரஸல் விமர்சிக்கிறார். மேலும் மே 27-ஆம் தேதி மன்னாவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. "ஒவ்வொருவரும் எதைச் செய்தாலும் வாதினாலும் வீண்பெருமையினாலும் செய்யாமல் அனைவரும் மனத்தாழ்மையை வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று பவுல் எச்சரிக்கிறார்." தற்பெருமை, உயர்ந்த ஸ்தானத்தைப் பெற முயல்வது போன்றவை தேவ ஊழியர்களின் ஓர் எதிரி என்பதை உணர்ந்து அவைகளை அப்புறப்படுத்த வேண்டும். இதற்கு மாறாக இவர்கள் தாழ்மையான சிந்தையுடையவர்களாக இருந்து, தன் உடன் சகோதரர்களை, தங்களிலும் மேலானவர்களாக கருதி இப்படிப்பட்ட காரியத்தில் மேன்மைபாராட்ட வேண்டும். எல்லா வரங்களும், திறமைகளும் எந்த சபையிலும் ஒருவரிடத்தில் காணப்படுவது அரிது. ஒருவர் மனத்தாழ்மை உள்ளவராக இருந்து மற்றவர்களிடையே காணப்படும் சில நற்குணங்கள் தன்னிலும் மேலானது என்று எண்ணக்கூடிய சிந்தை மிக அவசியமானது."

நம்முடைய பரலோக பிதா மற்றும் நம்முடைய இரட்சகர் இருவருமே ஒருவரோடொருவர் முழுமையாக ஒப்பந்தத்தில் இருக்கிறார்கள். இதன் விளைவாக இவர்கள் முழுமையான ஒற்றுமையில் இருக்கிறார்கள். ஒப்பந்தம் இல்லாத ஒற்றுமை கூடாத காரியம். வீட்டிலும் சரி குடும்பத்திலும் சரி அல்லது தேவனுடைய ஜனங்களின் சபைகூடுதலிலும் சரி, சத்தியத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு கோணத்திலும் அனைவருக்கும் ஒரேவிதமான கருத்து இருக்க வேண்டுமென்பது பொருளல்ல. ஆயினும் மாற்றமுடியாத சத்தியத்தின் ஆவி மற்றும் அடிப்படை போதனைகளில் நாம் இணக்கமாக இருக்க வேண்டும். "இந்த நிபந்தனைகளைப் பின்பற்றுபவர்களை மிகப் பெரிதான நிலையில் நம்முடைய சகோதரர்களாலே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆண்டவருடைய ஜனங்களுக்கு எங்களுடைய அறிவுரை என்னவென்றால், அடிப்படையை விட அதிகமாக மற்றவர்கள்மேல் நுகத்தைச் சுமத்தாமல் இருக்க வேண்டும். இல்லையேல், அவர்களும் கட்டில்லாதவர்களாக இருந்து பிறரையும் கட்டில்லாதவர்களாக இருக்கச்செய்து ஒருவர் மற்றொருவருடன் முடிந்தளவிலான ஐக்கியத்தில் ஒப்பந்தத்தில் பங்கெடுக்க வேண்டும்" (R5284).

"இதோ சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும், எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்" (சங்கீதம் 133:1-3). இந்த அழகான சங்கீதம் நம்முடைய ஆண்டவரைப்பற்றியும், சபையைப்பற்றியும் மற்றும் தலை மற்றும் சரீரத்திற்கும் இடையிலுள்ள ஒற்றுமைப்பற்றி பேசுகிறது. இந்த ஒப்பந்தம் பரிசுத்த வேதநூலில், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலில் மற்றும் தேவனுடைய சித்தத்தை ஒருமித்து செயல்படுத்துவதை தேடுவதின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும்.

நாம் காயப்படும்போது அந்தத் தகவல் நம்முடைய மூளைக்குச் சென்று, அங்கிருந்து கட்டளைப் பிறப்பதற்கு முன்னதாகவே நம்முடைய கைகள் உடனடியாகச் சென்று காயப்பட்ட இடத்தை ஆற்றித்தேற்றுகிறது. "அப்படியே கிறிஸ்தவன் சரீர அங்கத்தினரோடும் இருக்க வேண்டும். தலையாகிய ஆண்டவரின் முழுமையான தொடர்பும் இரக்கமும் கொண்டவர்கள் அவரோடு "ஒரே ஆவியாக" இவ்வளவு பரந்த மனப்பான்மையோடு இருக்க வேண்டும். அவருடைய சித்தத்தைச் செய்வதற்கு அக்கறைக்கொண்டவர்களாக, அவருடைய சித்தம் இன்னதென்று முன்னதாகவே நன்கு அறிவூட்டப்பட்டவர்களாக, சில நேரங்களில், அவர்களோடு தொடர்பில் இருப்பவர்களுக்கு வார்த்தைகளாலோ செயலாலோ மற்றவிதத்திலாலோ தானாகவே உதவிகரம் நீட்டுகிறார்கள்" (R2986).

### தோழமை: ஒற்றுமைக்கான ஒரு பரீட்சை

"அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1 யோவான் 1:7). இதே வார்த்தை 1 கொரிந்தியர் 10:16ஆம் வசனத்தில்

காணப்படுகிறது. இதுவே எல்லா பாவத்திலிருந்தும் நம்மைச் சுத்திகரிக்கக்கூடியது.

கூட்டமைப்பின் வழியாக நாம் கற்றுக்கொள்கிறோம். சம்பாஷணைகள், பிரசங்கங்கள் மற்றும் மற்றவர்களின் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளின் வழியாக நம்முடைய சொந்தக் குறைகளை நாம் புரிந்துகொண்டு, மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து நம்முடைய சொந்த பாவத்திலிருந்து கிறிஸ்துவின் இரத்தம் நம்மைச் சுத்திகரிக்கும் என்று உறுதி பெறலாம். அதுபோல, மற்றவர்களின் வாழ்க்கையில் அவர்களுக்கு உதவிசெய்வதற்கு இந்தக் கூட்டமைப்பு சாத்தியமாக்குகிறது. இப்போது இயேசுவின் அடிச்சுவடுகளை, நாம் அனைவரும் ஒருமித்து நடப்பதற்கு இயலாமற்போனால், நாம் ஒற்றுமையின் மற்றொரு பகுதியாகிய - சகோதரருக்கான அன்பில் வளர்ச்சியடைவதற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அதாவது, அவர்கள் நெருக்கமான பாதையில் நடப்பதற்கு நம்மால் முடிந்த எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். ஒற்றுமையின்மையை நாம் கண்டுபிடித்தால், அங்குச் சமாதானம் செய்கிறவர்களாக இருப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.

"சபையைக்குறித்து நம்முடைய ஆண்டவரின் உணர்வுமிக்க, அழகான மொழிநடையை நாம் கருத்தில் கொள்ளும்போது (யோவான்17:11) தெய்வீக குடும்பத்தின் ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் மகிமையின் ஒரு தோற்றத்தைக் காணலாம். இது நோக்கத்தில் ஒருமனப்பாடு, நம்பிக்கையில் ஒருமனப்பாடு, தயவில் ஒருமனப்பாடு, அன்பில் ஒருமனப்பாடு, கனத்தில் ஒருமனப்பாடு மற்றும் பரஸ்பர உடைமைகளில் ஒருமனப்பாடாகும். நம்முடைய ஆண்டவர் விவரித்தப்படி இந்த ஒற்றுமை பிதாவுக்கும் தமக்கும் முன்னதாகவே காணப்படுகிறது. ஆனால் அவருடைய சீஷர்களைப் பொறுத்தவரையில், அது இனி நிறைவேற வேண்டிய காரியமாக இருந்தது; இதனுடைய முழுமையான நிறைவேற்றமே, நாம் ஆர்வத்துடன் விரும்பிப் பெறவேண்டிய நிலையான இலக்கு என்று நாம் கற்பிக்கப்பட்டுள்ளோம் (R5339).

### ஒற்றுமையின் நோக்கம்

நம்முடைய ஒருமனப்பாட்டிற்கு ஒரு நோக்கம் உள்ளது. இந்த முழு குடும்பத்தின் மனுஷரையும் ஆசீர்வதிப்பதற்கு, ஒருமித்து வேலை செய்ய வேண்டும். சர்வ சிருஷ்டிகளும் தேவனோடு ஒப்புரவாகுதலின் வேலைக்கு உலக தோற்றத்திற்கு முன்னதாகவே கிறிஸ்து மற்றும் சபையின் வேலைகள் வடிவமைக்கப்பட்டது; நம்முடைய பிரதான ஆசாரியனாகிய ஆண்டவர், நம்முடைய பலவீனங்களுக்கு மிகுந்த இரக்கம் காட்டும்படியாக, அவரே பல்வேறு அனுபவங்களுக்குள் பிரவேசித்ததுபோல கிறிஸ்துவின் இராஜ்யத்தில் பரிபூரணம் அடைவதற்கு உதவி செய்பவர்களும் அவர்களுக்கு இரக்கம் காட்டும்படியாக ஆசாரியர்களும் அதுபோல அனுபவங்களுக்குள் பிரவேசிக்க வேண்டும் (எபிரெயர் 4:4, 15).

இதன்விளைவாக அனைத்து மனுஷரும் தேவனோடும் ஒருவரோடொருவரும் இசைந்திருப்பார்கள். சிருஷ்டிப்பின் ஒருமனப்பாடே தெய்வீக திட்டத்தின் முக்கிய இலக்காகும். "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்" (எபேசியர் 1:9, 10).

மகா பிரமிடில் எல்லா கோடுகளும் ஒரே மூலைக்கல்லைக் குறிக்கிறது. மனுஷன் தன்னுடைய சிருஷ்டிகரோடு இசைந்திருக்கும்போது இயேசுவின் பிறப்பில் தேவதூதர்கள் பாடின புகழ் பாடலின் வார்த்தைகள் நிறைவேறும். "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" (லூக்கா 2:14). அந்நேரத்தில், "உம்முடைய இராஜ்யம் வருக உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக" என்ற ஜெபம் நிறைவேற்றம் அடைந்திருக்கும்.

இனி மரணம் இல்லாத யுத்தங்கள் இல்லாத மற்றும் சர்வாதிகாரம் இல்லாத ஒரு இராஜ்யத்தை அற்புதமான தேவனுடைய திட்டத்தின் வழியாகக் காணக்கூடிய ஒரு ஆழமான பார்வையை இன்று நாம் பெற்றுள்ளோம். ஆகவே நம்மை கிறிஸ்துவுக்குள் அழைத்து, அவருக்குள் நம்மை ஒப்புரவாக்கி, அவருடைய சித்தத்தின் இரகசியங்களை நமக்கு வெளிப்படுத்தி, ஜீவபாதையில் நம்மை நடத்தி, தெய்வீக சுபாவத்திற்குப் பங்காளிகளாவதற்கு, நமக்கு வாக்களித்த நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருக்கக்கடவோம். "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்" (சங்கீதம் 116:12-14) என்ற சங்கீதக்காரரின் வார்த்தைகளைப் பிரதிபலிப்போமாக.

**தீர்க்கதரிசனத்தில் இன்று**

# இஸ்ரயேல் தேசம் உலகிற்கு எதிராக நிற்கிறது

"உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதியாகமம் 12:3).

டிசம்பர் 24 அன்று, 1948 முதல் 1967 வரை, மேற்கு கரை எருசலேமின் சில பகுதிகள் மற்றும் ஜோர்டானிலிருந்து வாங்கிய சில நிலப்பகுதிகள், இஸ்ரயேல் சட்டவிரோதமாக "ஆக்கிரமித்துள்ளது" என்று ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியது. வீட்டோவிற்காக (veto) பலமுறை இஸ்ரயேல் அரசாங்கம் முறையீடு செய்தபோதிலும் அமெரிக்கா முதன்முறையாக வாக்களிப்பதிலிருந்து வெளியேறியது. கடந்த ஒரு வருடமாக நிலத்திற்குரிய எந்தத் தீர்வில் இஸ்ரயேல் இறங்கினாலும் அதற்குக் கண்டனம் தெரிவிக்கும்வகையில் அமெரிக்கா தனது தீர்ப்பைக் கொண்டுவருகிறது.

ஏனெனில் பாதுகாப்பு சபையின் நிரந்திர உறுப்பினர்களாய் இருக்கும் இந்த நான்கு நாடுகளுக்கு மட்டுமே வீட்டோ பவர் இருக்கிறது (சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன்). அமெரிக்கா அதிலிருந்து விலகியதால் தீர்மானம் இயற்ற அனுமதிக்கப்பட்டது. புத்துயிர் தீர்மானத்திற்கு நியூசிலாந்து, மலேஷியா, வெனிசுலா மற்றும் செனகல் இணை அனுசரணையாளராக செயற்பட்ட போதிலும் எகிப்து முதன்மையான ஆதரவாளராய் இருந்து ஐநாவின் வாக்கெடுப்பு காலவரையின்றி தமதாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டது.

ஐநாவின் வாக்களிப்பு, 1948-இல் நடந்த போர் நிறுத்த உடன்படிக்கையைக்கொண்டு இஸ்ரயேலின் உரிமைகள் பறிக்கப்படும், மேலும் யூதேயா, சமாரியா மற்றும் கிழக்கு எருசலேம் "ஆக்கிரமிக்கப்பட்ட" பாலஸ்தீன நாடுகளாக அறிவிக்கப்படும். ஏனெனில் பாதுகாப்பு சபையின் தீர்மானங்கள் சர்வதேச சட்டத்தை உருவாக்குகின்றன. இதன் பொருள் என்னவென்றால், "யூத கால் பகுதி" என்று அழைக்கப்படும் கிழக்கு எருசலோமில் இருக்கும் யூத பகுதிகள் சட்ட விரோதமானது என்று அறிவிக்கப்படும். யூத கால் பகுதிகளில் வசித்துவரும் யூத குடிகள் சர்வதேச குற்றவாளிகளாய்க் கருதப்படுவார்கள்.

ஐநா சபை உருவாக்கிய தீர்மானங்களில் அதன் உறுப்பு நாடுகளிடம் "சர்ச்சைக்குரிய" பிரதேசங்களில் இஸ்ரயேலிய பொருட்களைப் பயன்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டனர். இது அமெரிக்க காங்கிரசுக்கு ஒரு மேன்மையை அளித்தது. ஏனெனில் இதன் பொருட்டு அமெரிக்க நிர்வாகம் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது என்ற முடிவு, இரு கட்சி தலைவர்களுக்கும் பெரும் அதிர்ப்தியை உண்டாக்கியது.

எனினும் புதிய அமெரிக்க நிர்வாகம் இதைக்குறித்து கருத்து வேறுபாடு மற்றும் ஏமாற்றத்தை வெளிப்படுத்தினாலும், எடுக்கப்பட்ட முடிவில் எந்த மாற்றமும் இருக்க வாய்ப்பில்லை. ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானங்கள் இரத்து செய்ய ஒரே வழி ஐநா பாதுகாப்பு கவுன்சில் மீண்டும் இன்னொரு தீர்மானம் எடுக்க வேண்டும். ரஷ்யா மற்றும் சீனாவுக்கு இந்த வீட்டோ பவர் இருப்பதால், இதுவும் செயல்படுத்த முடியாமல் போய்விடும்,

### ஐநா செயலாளர் பாராபட்சமாய் உள்ளது என்று கருதுகிறார்

வெளிச் செல்லும் ஐநா செயலாளர் பான் கி-மூன் சர்வ தேச அங்கத்தில் "யூத நாடு ஒரு வலுவாக பேசப்படுகிற நாடு" என்றும் அதில் "பொருத்தமற்ற" ஒரு தலை சார்புள்ளது என்றும் கூறுகிறார். டிசம்பர் 24 அன்று அவர் புறப்படும்போது, அவருடைய உரையின்போது "பல ஆண்டுகளாக நடக்கும் அரசியல் உபாயங்களால், பல தீர்மானங்கள், அறிக்கைகள் மற்றும் மாநாடுகள் இஸ்ரயேலை விமர்சிக்கும் வண்ணமே உருவாகிக்கொண்டிருக்கிறது. ஐநா உறுப்பினர்களால் இஸ்ரயேலுக்கு எதிராக எந்தப் பாரபட்சத்தையும் ஏற்கக்கூடாது" என்று கூறுகிறார். ஐநா சபையின் பல உறுப்பினர்கள் அதிலும் முக்கியமாக ஐநா மனித உரிமை கவுன்சில் (UNHRC) இஸ்ரயேல்-எதிர்ப்பு மற்றும் யூத எதிர்ப்பு நிகழ்ச்சி நிரல்களை ஏற்படுத்தி உள்ளனர். ஏறக்குறைய பாதிக்கு மேற்பட்ட UNHRC-யின் தீர்மானங்கள் இஸ்ரயேலை கண்டிப்பதாகவே உள்ளது. ஆனால் மற்ற இடங்களில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், யுத்தம் மற்றும் பிறருக்கு இழைக்கப்படும் கொடூரங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக, யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் எருசலேமுடன் வைத்திருக்கும் வரலாற்றுப் பிணைப்புகளை மறுத்து பல தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளன. "கீ-மூன் செயலாளராய் இருந்தபோது, இஸ்ரயேலரை எதிர்த்து 223 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. ஆனால் கடந்த ஆறு வருடங்களாக நடக்கும் மோதலில் தங்கள் சொந்த குடிமக்களையே படுகொலை செய்யும் சிரியாவின் மீது வெறும் எட்டு தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டது என்கிறார்" ஐநாவிற்கு இஸ்ரயேலிய தூதராய் இருக்கும் டேனிடெனான்.

### இஸ்ரயேல் கூட்டிச்சேர்க்கப்படல்

ஆமோஸ் தீர்க்கதரிசி கூறுகையில், "என் ஜனமாகிய இஸ்ரயேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சைத் தோட்டங்களை நாட்டி,

அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்" (ஆமோஸ் 9:14, 15). 19-ஆம் நூற்றாண்டில் சீயோன் இயக்கம் துவங்கியபோது, உலகின் அனைத்துப் பகுதிகளிலும் யூதர்கள் குடிபெயர்ந்தார்கள். 1800-ஆம் ஆண்டு பிற்பகுதிகளில் ரஷ்யாவிலிருந்தும் மற்றும் ரஷ்ய கட்டுப்பாட்டிலிருந்த நிலப்பகுதிகளிலிருந்தும் துன்புறுத்தப்பட்ட யூதர்கள் பாலஸ்தீனியாவின் புதிய குடியேற்றங்களுக்குத் திரும்பினர் (எரேமியா 16:15, 16).

1930-ஆம் ஆண்டு நாஜியின் துன்புறுத்தலுக்கு பயந்து யூதர்கள் ஐரோப்பாவிலிருந்து பாலஸ்தீனத்தில் குடிபெயர்ந்தனர். அச்சமயம் அந்நிலம் பிரிட்டிஷ் மற்றும் அவர்களின் அரேபிய பங்குதாரர்கள் கட்டுப்பாட்டில் இருந்ததால் அவர்கள் அந்த நிலத்தின் எந்தக் கதவுகளையும் திறக்கவில்லை. யூதர்கள் எவ்வாறு தங்களுக்கு வாக்களிக்கப்பட்ட நிலப்பகுதிக்கு கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசி விவரிக்கிறார் "நீங்கள் ஜனங்களுக்குள் இராதபடிக்கு நான் உங்களைப் புறப்படப்பண்ணி, நீங்கள் சிதறியிருக்கிற தேசங்களில் இராதபடிக்கு நான் உங்களைப் பலத்தகையினாலும், ஓங்கிய புயத்தினாலும், ஊற்றப்பட்ட உக்கிரத்தினாலும் கூடிவரச்செய்வேன்" (எசேக்கியேல் 20:34). இவ்வாறு யூதர்கள் கூட்டிச்சேர்க்கப்படும் அந்த நீண்ட நாட்களில் பூமியில் இடுக்கமான காலமே நடந்துகொண்டிருக்கும்.

இஸ்ரயேல் வேதனைக்கு உள்ளாக்கப்படும் நேரங்களிலெல்லாம் முழு உலகத்திற்கும் வேதனை உண்டாகும் என்று வேதாகமம் கூறுகிறது. "இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை" (1 தெசலோனிக்கேயர் 5:2, 3). ஒரு பெண் எப்படி தன் பிரசவ வேதனையை அனுபவிப்பாளோ, அதுபோல், நடுவில் சில காலங்கள் அமைதியும் பாதுகாப்பும் இருந்தாலும் உலகம் வேதனைக்கு உள்ளாகும் என்ற அந்த அறிக்கை குறிப்பிடத்தக்கது. உலகின் அனைத்து தேசிய அரசுகளும் சிதைவதே இந்த வேதனைகளின் விளைவாகும். மற்றும் இறுதியாக கிறிஸ்துவின் இராஜ்யம் உருவெடுத்து ஸ்தாபிக்கப்படும்.

ஆயிர வருட அரசாட்சியின்போது உலகத்தை ஆசீர்வதிக்கும் நோக்குடனே இன்று துன்பங்களின் மூலம் இஸ்ரயேல் திருத்தப்பட்டு வளர்ந்துவருகிறது. இந்தப் பூமிக்கு ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் பூமியின் வித்தாக இருக்கும் ஆபிரகாமின் பங்காகவே இஸ்ரயேல் விளங்கும் (ஆதியாகமம் 22:17).

**கிறிஸ்தவர்களின் பங்கு:**

பவுல் கூறும்போது (எபிரெயர் 12:6), இஸ்ரயேல் ஒரு தேசமாய் உருவாக எடுக்கும் முயற்சிகளில் மிகுந்த வேதனையடைகிறது என்ற அந்தச் செயலைக் கண்டு நாம் ஆச்சரியம் கொள்ளக்கூடாது. தேவன் அந்தத் தேசத்தை எல்லோருக்கும் ஓர் ஆசீர்வாதமான தேசமாக மாற்ற அதனை ஆயத்தம் பண்ணுகிறார். அமெரிக்கா உட்பட இஸ்ரயேலுக்கு சாதகமாக இருக்கக்கூடிய அனைத்து தேசங்களும் புற முதுகு காட்டுமென்று என்று நாம் எதிர்பார்க்க வேண்டியதாக இருந்தாலும், யேகோவா தேவன் அவ்வாறு செய்யமாட்டார். அவர் வாக்களித்ததுபோலவே அவர் தொடர்ந்து அவளுக்கு ஆறுதல் அளித்து அவளுக்கு நன்மை மட்டுமே வரச்செய்வார்.

"கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச்செய்து, அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப்போலவும் ஆக்குவார்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும்" (ஏசாயா 51:3). எனினும் இதற்குமுன் சுவிசேஷ யுகத்தின் இறுதி வேதனை நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது, அதில் கிறிஸ்துவின் மணவாட்டியின் நிறைவு பெறுதலும் நடக்க வேண்டும்.

கிறிஸ்து தமது ஆயிர வருட அரசாட்சியைத் துவங்கிய பின்பு, எல்லா தேசங்களும் அமைதியை அனுபவிக்கும் மற்றும் ஒரு நோக்கத்துடனே இஸ்ரயேல் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டது என்றும் அறிந்துகொள்ளும். சங்கீதம் 122:6-இல் குறிப்பிடப்படும் எருசலேமின் சமாதானம் உலகின் மற்றப் பகுதிகளுக்கும் பாயும் (சகரியா 14: 16-19). உயிர்த்தெழுந்த மனிதன் பூமியின்மீது உண்மையான சமாதானத்தை அனுபவிப்பான் (லூக்கா 2:14). ஆய்வு பாடத்தில் தேவன் ஆபிரகாமுக்குச் செய்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு பூமியிலுள்ள சகல குடும்பங்களும் மெய்யாகவே ஆசீர்வதிக்கப்படும். அந்த நாட்கள் விரைவில் வர நாம் பிராத்தனைச் செய்வோம்.

**சங்கிலியாண்டபுரம் வேதமாணவர்கள், திருச்சி.**

**கைப்பேசி : 9244611241, 8122224919**